விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 123 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 08 வெள்ளிக்கிழமை (21.04.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=



## இலங்கை - இந்திய உறவு வலுவாக வேண்டும்

### இந்திய உயர்ஸ்தானிகரிடம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த



(கொழும்பு)

இலங்கை - இந்தியாவுக்கிடையிலான உறவு மேலும் வலுவாக வேண்டும் என இந்திய உயர்ஸ்தானிகரிடம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர்கோபால் பாக்லே, முன்னாள் 15

## கதவடைப்பு போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தவர்களுக்கு

### 13ஐ எதிர்க்க முதுகெலும்பு உண்டா? கஜேந்திரகுமார் எம்.பி கேள்வி



(யாழப்பாணம்)

எதிர்வரும் 25ஆம் திகதி வடக்குக் கிழக்கில் கதவடைப்பு போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தவர் 16

### எதிர்வரும் 25 முதல் 28 வரை

## பாராளுமன்றில் ஐ.எம்.எப் ஒப்பந்தம் தொடர்பான விவாதம்

(கொழும்பு)

எதிர்வரும் 25ஆம் திகதி முதல் 28ஆம் திகதிவரை ஐ.எம்.எப் ஒப்பந்தம் தொடர்பான விவாதம் பாராளுமன்றில் நடைபெறவுள்ளது.

நேற்றுக் காலை பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத் 15

## முட்டைக்கு சில்லறை விலை நிர்ணயம்

### வர்த்தமானி வெளியானது

(கொழும்பு)

முட்டைக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயித்து அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நிறையின் அடிப்படையில் முட்டைகளை விற்பனை செய்வதற்கான அதிக 16

### புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்

## மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கே

### அமெரிக்கத் தூதுவருக்கு நீதி அமைச்சர் விளக்கம்



(கொழும்பு) மனித உரிமைகள் மீறப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தில் இல்லை. மக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காகவே புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்காலத்தில் அனைத்தும் டிஜிட்டல் மயமாகும்

### அமைச்சர் பந்துல குணவர்த்தன

(கொழும்பு)

எதிர்காலத்தில் அனைத்து அரச நிறுவனங்களுக்கும் டிஜிட்டல் முறையை அறிமுகப்படுத்துவதன் மூலம் மக்கள் சேவையை வினைத்திறனுடன் மேற்கொள்ள முடியும் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். 16

## வெப்பம் மேலும் அதிகரிக்கும்

### பொதுமக்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

நாடு முழுவதும் மேலும் வெப்பநிலை 15

### பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்துக்கு எதிராக

## வடக்குக் கிழக்கில் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கண்டித்து வடக்குக் கிழக்கு மாணங்களில் நேற்று ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

வடக்குக் கிழக்கு பெண்கள் ஒன்றியம் இந்த ஆர்ப்பாட்டங்களை 15




க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான
மேல் மாகாண கல்வித் திணைக்களத்தின்
பரீட்சை வினாத்தாள்
உள்ளே

## அரசாங்கத்தின் மிருகத்தனத்தை ஒன்றிணைந்து தோற்கடிப்போம்

### பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஊடாக கொண்டு வரும் அரச மிருகத்தனம் மற்றும் பயங்கரவாதத்தின் மூலம் இந்நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகளை அழிப்பதே இந்த அரசாங்கத் 15

## இலங்கையில் தேர்தல் நகைச்சுவையாக மாறியுள்ளது

### பஃவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையில் தேர்தல் என்பது நகைச்சுவையான நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதாக பஃவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி விசனம் வெளியிட்டுள்ளார்.

ஜனநாயகத்துக்கான சிவில் சமூக 16

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில்

# சட்ட ஆலோசனை பெற்ற பின் தீர்மானத்தை கூட்டாக அறிவிப்போம்

## அஸ்கிரிய பீடம் தெரிவிப்பு

(கொழும்பு)

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தில் ஜனநாயகம், அடிப்படை உரிமைகள் ஆகியவற்றுக்கு எதிரான ஏற்பாடுகள் காணப்படுமாயின் அது தொடர்பில் மக்களுக்கு எடுத்துரைப்பது மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பாகும்.

ஜனநாயக உரிமைகளை பயன்படுத்திக் கொண்டு ஒரு தரப்பினர் அரசுக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுக்க முயற்சித்தால் அதற்கு அரசாங்கத்தால் இடமளிக்க முடியாது என அஸ்கிரிய மகாநாயக்கர் வரக்காகொட ஸ்ரீ ஞானரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் ஆராய்ந்து வருகிறோம். சட்ட ஆலோசனைகளை பெற்றுக்கொண்டதன் பின்னர் உத்தியோகபூர்வ தீர்மானத்தை கூட்டாக அறிவிப்போம் என அஸ்கிரிய மகாநாயக்க தேரர் குறிப்பிட்டுள்ளார்.

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் தெளிவு படுத்துவதற்காக சுதந்திர மக்கள் சபை உறுப்பினர்கள் நேற்று அஸ்கிரிய மற்றும் மல்வத்து ஆகிய மகாநாயக்க தேரர்களை சந்தித்தனர்.

மல்வத்து மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரரை சந்தித்ததன் பின்னர் டலஸ் அணியினர் அஸ்கிரிய மகா நாயக்க தேரர் வரகாகொட ஸ்ரீ ஞானரத்ன தேரரை சந்தித்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த அஸ்கிரிய மகாநாயக்கர் வரக்காகொட ஸ்ரீ ஞானரத்ன தேரர் உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தில் ஜனநாயகம் அடிப்படை உரிமைகள் ஆகியவற்றுக்கு எதிரான ஏற்பாடுகள் காணப்படுமாயின் அது தொடர்பில் பாராளுமன்றத்திலும்,வெளியிலும் மக்களுக்கு எடுத்துரைப்பது மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பாகும்.

நாட்டின் ஜனநாயகம் மற்றும் கருத்து சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக கருத்துக்கள் ஏதும் இல்லை. சுதந்திரம் என்பதை முன்னிலைபடுத்தி தோற்றம் பெறும் பிரச்சினைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

ஜனநாயக உரிமைகளை பயன்படுத்திக் கொண்டு ஒரு தரப்பினர் அரசுக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுக்க முயற்சித்தால் அதற்கு அரசாங்கத்தால் இடமளிக்க முடியாது. அரச நிர்வாகத்தை முன்னெடுத்து செல்ல அரசாங்கம் ஒரு சில சட்டங்களை காலத்தின் தேவைக்கு ஏற்ப இயற்ற வேண்டும்.

இன்று எதிர்க்கட்சியாக செயற்படும் தரப்பினர் கடந்த காலங்களில் ஆட்சியில் இருக்கும் போது பல சட்டங்களை உருவாக்கினார்கள்.அப்போது மகாநாயக்க தேரர்களின் ஆலோசனைகளை அவர்கள் பெற்றுக்கொள்ளவில்லை.

நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகள்,ஜனநாயகம் ஆகியவற்றுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் சட்டம் இயற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும். வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் ஆராய்ந்து வருகிறோம்.சட்ட ஆலோசனைகளை பெற்றுக்கொண்டதன் பின்னர் உத்தியோகபூர்வ தீர்மானத்தை அறிவிப்போம் என்றார்.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூல வரைபில் ஜனநாயகம், அடிப்படை உரிமைகள் ஆகியவற்றுக்கு எதிரான ஏற்பாடுகள் காணப்படுமாயின் உயர் நீதிமன்றத்தை நாடுவது சிறந்த வழிமுறையாக இருக்கும் என அஸ்கிரிய மகா விகாரையின் செயலாளர் பேராசிரியர் மெதகம தம்மானந்த தேரர் தெரிவித்தார். (ம-7,9)

# காணித் தகராறு முதியவர் கொலை

(கொழும்பு)

கல்னேவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹெலபதுகம பிரதேசத்தில் உள்ள வயல்வெளியில் ஆணொருவர் மண்வெட்டியால் தாக்கி கொலை செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

நெற்காணி தொடர்பில் ஏற்பட்ட தகராறு காரணமாக பெண் மற்றும் ஆண் ஒருவர் தாக்கப்பட்டதிலேயே ஆண் உயிரிழந்துள்ளதுடன், பெண் படுகாயமடைந்துள்ளார்.

இதில் 72 வயது முதியவர் உயிரிழந்துள்ளதுடன், 65 வயதுடைய மனைவிகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்த இருவரும் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் குறித்த ஆண் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.




# பொதுஜன பெரமுனவிற்கு ஜனாதிபதி அநீதி இழைக்கார்

## சந்திரசேன எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

அமைச்சரவை மறுசீரமைப்பின்போது தமது கட்சிக்கு அநீதி இழைக்காத வகையில் ஜனாதிபதி செயற்படுவார் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

அத்துடன், அமைச்சரவை மறுசீரமைப்பு இடம்பெற வேண்டும் என்பதே தமது கட்சியின் யோசனையாக உள்ளது எனவும் அந்த கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்துள்ளார்.

சஜித் பிரேமதாச அல்ல ஐக்கிய மக்கள் சக்தியின் அனைத்து எம்.பிக்களும் அரசு பக்கம் வந்தால்கூட தமது கட்சிக்கு பிரச்சினை கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7,9)

# இலங்கையில் அதிகளவான மின் பாவனை பதிவாகியது

அண்மைக் காலங்களில் இலங்கையின் நாளொன்றுக்கான அதிகூடிய மின்சார தேவை நேற்று முன்தினம் பதிவானதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம், தேவைக்கு ஏற்ப நிகர மின் உற்பத்தி 49.53 ஜிகா வாற்றாக பதிவானதாக நேற்று டுவிட்டர்பதிவில் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், நேற்று காலை பதிவு செய்யப்பட்ட உண்மையான தேவையின்படி மின் உற்பத்தி 50 ஜிகா வோட்டை தாண்டும் என மதிப்பிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன்படி, அண்மையில் நிறுவப்பட்ட அம்பாந்தோட்டை டீசலில் இயங்கும் மின் பிறப்பாக்கிகள் உட்பட இலங்கை மின்சார சபையின் அனைத்து அனல் நிலையங்களும் மின் உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் என அமைச்சர் உறுதியளித்தார். (ம-7,9)

## பூசகர் தேவை

அராலியில் அமைந்துள்ள அம்மன் ஆலயத்திற்கு இரு நேர பூஜை செய்வதற்கு பூசகர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.தங்கி இருந்து பூஜை செய்வதாயின் வீட்டு வசதி உண்டு.

077 331 1137

(153119)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1320 புதிய மருத்துவர்களை நியமிக்க நடவடிக்கை

(கொழும்பு)

நாடளாவிய ரீதியிலுள்ள அரச மருத்துவமனைகளுக்கு எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் 1320 புதிய மருத்துவர்கள் நியமிக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

குறிப்பாக பெருமளவான நியமனங்கள் பின்தங்கிய பிரதேசங்களில் அமைந்துள்ள மருத்துவமனைகளுக்கு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் நாட்டில் பொருளாதார பிரச்சினைகள் இருந்த போதிலும் ஒரே நேரத்தில் அதிகளவான மருத்துவர்களை நியமிக்க முடியும் என்பது இலவச சுகாதார சேவையில் பாரிய சாதனை என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் ஆண்டுதோறும் மருத்துவக் கல்விக்காக இணைத்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 1500 முதல் 1800 வரை காணப்படுகிறது. இதனை 5000 வரை அதிகரிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார். இதன் மூலம் இனிவரும் காலங்களில் சுகாதாரத்துறையில் பாரிய வளர்ச்சி எதிர்பார்க்கப்படுவதாகவும் அமைச்சர் கெஹெலிய தெரிவித்துள்ளார். (நி)

# உரத்தின் விலையை 4500 ரூபாவால் குறைக்க அரசாங்கம் அவதானம்

## விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர

(கொழும்பு)

**இந்த வருடம் நெற்செய்கைக்கான MOP உரத்தின் விலையை 4500 ரூபாவினால் குறைக்க அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.**

அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பில் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதாகவும், தற்போது சந்தையில் Mop உரத்தின் 50 கிலோகிராம் மூடை 18,500 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதால் அந்தத் தொகையை விவசாயிகளுக்கு ஏற்க சிரமமாக இருப்பதால் விலையைக் குறைக்கத் தீர்மானித்ததாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதன்படி அடுத்த வாரம் கூடவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

குறைந்த விலையில் உரங்களை வழங்குவதற்கு அரசாங்கத்திற்கு சொந்தமான இரண்டு உர நிறுவனங்களும் செயற்பட்டு வருவதால், இரசாயன உர விற்பனை தொடர்பில் சந்தையில் போட்டி உருவாகியுள்ளதோடு, இதன் மூலம் விவசாயிகள் பயனடைவதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.



இதன்படி, யூரியா உரத்தின் விலை குறைவடைந்துள்ளதால், எதிர்காலத்தில் TSP மற்றும் MOP ஆகிய உரங்களின் விலை மேலும் குறையும் என தனியார் துறை உர விற்பனையாளர்கள் அமைச்சரிடம் தெரிவித்துள்ளனர். (நி)

# இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட கண் சொட்டு மருந்து இடைநிறுத்தம்

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட கண் சொட்டு மருந்து பயன்பாடு இடைநிறுத்தப்படுவதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நாட்டின் அநேக மருத்துவமனைகளில் இந்த சொட்டு மருந்து பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்நிலையில் நுவரெலியாவில் இந்த வகை மருந்தினை பயன்படுத்திய நோயாளி ஒருவருக்கு பக்கவிளைவுகள் ஏற்பட்ட காரணத்தினால் மருந்து பயன்பாடு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அரச மருந்தக கூட்டுத்தாபனத்தினால் இந்த வகை மருந்து இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## விடைத்தாள் மதிப்பீட்டிற்காக

# கல்வியை அத்தியாவசிய சேவையாக மாற்றுவது பொருத்தமானதல்ல

## பல்கலை விரிவுரையாளர் சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

உண்மையான தேவையை கருத்தில் கொண்டு கல்வியை அத்தியாவசிய சேவையாக்குவது பொருத்தமான விடயம் என்பதுடன், விடைத்தாள் மதிப்பீட்டுக்காக அதனை அத்தியாவசிய சேவையாக மாற்றுவது ஏற்புடையதல்ல என்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

உயர்தர விடைத்தாள் மதிப்பீட்டை மேலும் தாமதப்படுத்தினால் அது அத்தியாவசிய கல்வி சேவையாக மாற்றப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் தெரிவித்தார். இதற்கு பதிலளித்த பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்க சம்மேளனத்தின் தலைவர் பேராசிரியர் ஷியாமா பன்னஹக்க தமது பிரச்சினைகளுக்கான தீர்வை வழங்க அரசாங்கம் இதுவரை முன்வரவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# உள்ளூராட்சி தேர்தல் நடக்காது

## ஜே.வி.பி உறுதி

(கொழும்பு)

எப்படியும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடக்காது. அது உறுதி. இருந்தும், தேர்தலைப் பெறுவதற்காக நாம் போராடுவோம்.

இந்த அரசுக்குப் பணம் ஒரு பிரச்சினை இல்லை. பணம் இல்லாமையால் தேர்தலை ஒத்திப்போடவில்லை. தோல்விப் பயத்தால்தான் தேர்தலை ஒத்திப்போடுகின்றார்கள் என ஜே.வி.பியின் சிரேஷ்ட உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி தெரிவித்தார்.

தேர்தல் மக்களின் உரிமை. அதை அவர்களுக்கு வழங்கியே ஆக வேண்டும். அதை மறுக்கும் உரிமை இந்த அரசுக்குக் கிடையாது. தேர்தல் நடக்கும் வரை போராடுவோம்.

இந்த நாட்டைக் கட்டியெழுப்ப எங்களால் மட்டுமே முடியும். எங்களால் முடியாவிட்டால் வேறு எவராலும் முடியாது. மக்கள் எங்களுக்குத் தருவது ஒரு வாய்ப்புதான். அந்த வாய்ப்பை நாம் சரியாகப் பயன்படுத்த வேண்டும். அதை நாங்கள் புரிந்துகொண்டே வேலை செய்கின்றோம்." என அவர் தெரிவித்தார். (நி)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்; நான்கு வருடங்கள் நிறைவு

## மௌன அஞ்சலி செலுத்துமாறு பேராயர் அழைப்பு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று நான்கு வருடங்கள் நிறைவடையவுள்ள நிலையில் இன்று வெள்ளிக்கிழமை அதனை நினைவு கூர்ந்து இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துமாறு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அனைத்து மக்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் சம்பவங்களில் முதலாவது குண்டு வெடிப்பு இடம்பெற்ற காலை 8.45 மணி முதல் இரண்டு நிமிடங்களை மௌன அஞ்சலிக்காக செலவிடுமாறு அவர் மக்களை கேட்டுக் கொண்டுள்ளார். குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வேண்டி கொழும்பு நீர் கொழும்பு வீதியில் அனைத்து மக்களினதும் பங்கேற்புடன் அமைதியான ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# விமல், கம்மன்பிலவுக்கு மஹிந்த தரப்பு வலைவீச்சு

(கொழும்பு)

விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோரை மீண்டும் வளைத்துப் போடுவதற்கு மஹிந்த ராஜபக்ஷ தரப்பு நடவடிக்கை ஒன்றை திரைமறைவில் மேற்கொண்டிருப்பதாக மஹிந்த தரப்பு வட்டாரத்தில் இருந்து அறியமுடிகின்றது.

எதிர்காலத்தில் எழப்போகும் அரசியல் பிரச்சினைகளின் போது விமல் தரப்பு மஹிந்தவுடன் இருப்பதுதான் ராஜபக்ஷ தரப்புக்கு வெற்றியைக் கொடுக்கும் என்று மஹிந்தவின் சகாக்கள் பலர் கருதுவதால் அவர்களின் யோசனைக்கு அமைய மீண்டும் விமல் தரப்பை மஹிந்தவுடன் இணைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

13 ஆம் திருத்தச் சட்டம், அரச நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்துதல் போன்ற பிரச்சினைகள் எதிர்காலத்தில் எழவுள்ளன.

பசிலுக்கும் விமலுக்கும் ஆகாது. அதனால் பசிலுடன் சேர்ந்து இந்த நடவடிக்கையை முன்னெடுக்க முடியாது என்பதாலும் விமலும் மஹிந்தவும் நீண்ட நெருக்கம் கொண்டவர்கள் என்பதாலும் மஹிந்தவை இணங்க வைத்தே விமலை வளைக்கும் நடவடிக்கையை அவர்கள் முன்னெடுத்து வருகின்றனர் என்று அறியமுடிகின்றது. (நி)

# தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்துங்கள்

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள அதிக வெப்பமான காலநிலை காரணமாக மக்களின் நாளாந்த நீர் பாவனை சுமார் 10 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் துணைப் பொது கண்காணிப்பாளர் என். யு. கே. ரணதுங்க இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார். மக்கள் முடிந்தவரை தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் நிலைமையை நிர்வகித்து வருவதாகவும் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதன் மூலம் நீண்டகாலத்திற்கு பிரச்சினையின்றி நீரினை வழங்க முடியுமெனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லக்னோவிடம் வீழ்ந்தது ராஜஸ்தான் ரோயல்ஸ்



10 அணிகள் பங்கேற்றுள்ள 16 ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது.

ஜெய்ப்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற 26 ஆவது லீக் ஆட்டத்தில் ராஜஸ்தான் ராயல்ஸ், லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் அணிகள் மோதின.

டாஸ் வென்ற ராஜஸ்தான் ராயல்ஸ் அணி பந்து வீச்சை தேர்வு செய்தது. அதன்படி, லக்னோ சூப்பர் ஜெய்ண்ட்ஸ் அணி களமிறங்கியது.

தொடக்க ஆட்டக்காரரர்களாக கே.எல்.ராகுல், கைல் மேயர்ஸ் ஜோடி அதிரடியாக ஆடியது.

முதல் விக்கெட்டுக்கு 82 ரன்கள் சேர்த்த நிலையில், கே.எல்.ராகுல் 39 ரன்னில் அவுட்டானார்.

ஆயுஷ் பதோனி ஒரு ரன்னிலும், தீபக் ஹூடா 2 ரன்னிலும் அவுட்டாகினர். கைல் மேயர்ஸ் அரை சதமடித்து 51 ரன்னில் ஆட்டமிழந்தார்.

ஸ்டோய்னிஸ் 21 ரன்னிலும், நிகோலஸ் பூரன் 29 ரன்னிலும் வெளியேறினர்.

இறுதியில், லக்னோ அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 154 ரன்கள் எடுத்தது.

இதையடுத்து, 155 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ராஜஸ்தான் அணி களமிறங்கியது.

இதில் அதிகபட்சமாக யாஷஸ்வி ஜெய்ஸ்வால் 44 ரன்களும், ஜோஸ் பட்லர் 40 ரன்களும், தேவ்தட் படிக்கல் 26 ரன்களும், ரியான் பராங் 15 ரன்களும், அஷ்வின் 3 ரன்களும், சஞ்சு சான்சன் 2 ரன்களும் எடுத்தனர். அஷ்வின் மற்றும் ரியான் பராங் ஆகியோர் ஆட்டத்தை இழக்கவில்லை.

இறுதியில் 20 ஓவர் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 144 ரன்கள் எடுத்து ராஜஸ்தான் ராயல்ஸ் தோல்வியை சந்தித்தது.

இதனால், 10 ரன்கள் வித்தியாசத்தில் லக்னோ அணி வெற்றி பெற்றது. (4)

## உலக கிண்ண

# டெஸ்ட் இறுதிப்போட்டி ஆஸி. அணி அறிவிப்பு




இந்தியாவுடனான டெஸ்ட் உலக கிண்ண இறுதிப் போட்டி நடைபெறவுள்ள நிலையில், போட்டியில் பங்கு பெறும் அவுஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகக் கிண்ண டெஸ்ட் தொடரின் இறுதிப்போட்டி வரும் ஜூன் 7 ஆம் திகதி லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் கடந்த 2021 முதல் 2022 வரை டெஸ்ட் தரவரிசையில் முதல் இரண்டு இடம் பிடித்த அவுஸ்திரேலியா மற்றும் இந்திய அணிகள் மோதவுள்ளன.

இதனை தொடர்ந்து போட்டியில் கலந்து கொள்ளும் அவுஸ்திரேலிய அணி வீரர்கள் பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் 17 அவுஸ்திரேலிய அணி வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இதில் ஓய்விலிருந்த அவுஸ்திரேலிய அணிகேப்டன் பாட் கம்மின்ஸ் மீண்டும் அணிக்கு திரும்பி கப்டனாக பதவியேற்கிறார். துணை கேப்டனாக ஸ்டீவ் சுமித் ஆடுகிறார்.

கடந்த சில மாதங்களாக மோசமான பார்மிலுள்ள டேவிட் வார்னர் மீண்டும் அணிக்கு திரும்புகிறார். ஆல்ரவுண்டர்களாக கேமிரான் கிரீன், மிட்செல் மார்ஷ் ஆகியோர் களமிறங்குகிறார்கள்.

மேலும் சுழற்பந்து வீச்சில் டாட் மார்ஃபி, நாதன் லயன் ஆகியோர் அணியில் இடம் பெறுகின்றனர். வேகப்பந்து வீச்சில் கப்டன் பாட் கம்மின்ஸ், மிட்செல் ஸ்டார்க், ஜாஸ் ஹேசல்வுட் மற்றும் போலாண்ட் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2814

Search for people, places and things

### அருண்மொழி




### நிஷாந்தினி




### ஜெனா




### கரிகாலன்




### சிந்து




### சங்கவி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கண் வைத்தியசாலையில் அறுவை சிகிச்சைகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

தேசிய கண் வைத்திய சாலையின் சகல அறுவை சிகிச்சைகளும் நேற்று முன் தினம் புதன்கிழமை முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அறுவை சிகிச்சை அறையில் கிருமிகள் பரவியதன் காரணமாக இவ்வாறு சிகிச்சைகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் ஏ.ஆர்.எம். தௌபிக் தெரிவித்துள்ளரர்.

அறுவை சிகிச்சை அறையில் கிருமிகள் பரவுவதை துரிதமாக அகற்றி வழமை நிலைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் மீளத் திறப்பது தொடர்பில் குறிப்பிட்ட திகதியை அறிவிக்க முடியாது எனவும் பணிப்பாளர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இது தொடர்பில், அறுவை சிகிச்சை அறைக்குள் கிருமிகள் எவ்வாறு பரவியது என்பது தொடர்பில் சுகாதார அமைச்சினால் முறையான விசாரணை நடத்தப்பட வேண்டுமென சுகாதார நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (நி)

## வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# பழஞ்சோற்று நீர்/நிசிநீரின் மருத்துவ முக்கியத்துவம்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

இனிவரப்போதும் வெப்பமான காலத்திற்கு உகந்த தமிழர்களின் பாரம்பரிய உணவுகளில் முக்கியமானது அமுதத்திற்கு ஒப்பானதுமான நீராகாரம் பழஞ்சோற்று நீராகும். அதிலும் காலை எழுந்தவுடன் பருகும் நிசிநீர், நீராகாரம், சோற்று நீர், நீத்தண்ணீர், அன்னக் காடி, அன்ன அமுது என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. உடல் நலம் காக்கும் சிறந்த அமுதமுமாகும். காலையில் பருகும் பானம் உடல் ஆரோக்கியத்திற்கு மிகச் சிறந்ததாகும். சித்தர் செய்யுளின்படி,

**"ஆற்று நீர் வாதம் போக்கும்**
**அருவி நீர் பித்தம் போக்கும்**
**சோற்றுநீர் மூன்றையும்**
**போக்கும்"**

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. வாத, பித்த, கபம் என்கிற உயிர் ஆற்றல்கள் உடலில் கூடியோ, குறைந்தோ நோய் ஏற்படுத்துகின்றன. உணவுகளாலோ நமது செயற்பாடுகளாலோ இந்த மூன்று உயிராற்றல்களும் மாறுபட்டால் அவற்றை உடனே சீர்செய்யக் கூடிய தன்மை சோற்று நீராகிய நீராகத்திற்கு உண்டு. முந்தின நாள் உண்ட உணவின் மாறுபாடுகள், செயல் மாறுபாடுகள் இவை உடலில் பல மாற்றங்களை ஏற்படுத்தும். இரவு உறங்கும் போது சிலவிதமான் ஆற்றல் மாறுபாடுகள் உடலில் ஏற்படும் இவற்றை காலை ஒழுக்கங்களை நாம் முறையாக பின்பற்றுவதன் மூலம் சரிசெய்து விடலாம். அவற்றில் முக்கியமானது நிசிநீர் பருகுதல். நிசி நீர் வெவ்வேறு முறைகளில் தயாரிக்கலாம். முக்கியமாக சோறை கொதிக்க வைத்து வடிக்கும் முறையே உகந்ததாகும்.

முறை I: அன்று பொங்கிய அரிசிச் சோற்றில் நீர் ஊற்றி வைக்கவேண்டும். மறுநாள் காலையில் தயாராகும் நீராகாரம்.

முறை II: அன்று பொங்கிய அரிசிச் சோற்றில் வடித்த கஞ்சியும் நீரும் ஊற்றி வைத்து மறுநாள் பயன்படுத்தலாம்.

முறை III: அன்று பொங்கிய அரிசிச் சோற்றுடன் கொதி கஞ்சியும் வடிகஞ்சியும் ஊற்றி வைத்திருந்து மறுநாள் பயன்படுத்தலாம்.

குறிப்பு:- கொதிகஞ்சி எனக் குறிப்பிடப்படுவது சோறு முக்கால் பாகம் வெந்த பின்பு உலையிலிருந்து கஞ்சி வெளிப்படும். அந்தச் சமயம் கொதிக்கும் கஞ்சியை கரண்டியால் எடுப்பது கொதி கஞ்சி சித்த மருத்துவத்தில் கொதி கஞ்சி, வடிகஞ்சி, உறைகஞ்சி என மூன்றுக்கும் குணங்கள் வேறுபடும். இதில் கொதிகஞ்சியும் சோறு வெந்த பிறகு வடிக்கும் வடி கஞ்சியும் சிறந்தது. வடித்த கஞ்சி சிறிது நேரத்தில் உறைந்து கெட்டிபடும். இது நன்றன்று.

முதல்நாள் செய்த நீராகாரத்தில் தொடர்ந்து தினமும் நாம் கொதிகஞ்சியும் வடிகஞ்சியும் ஊற்றலாம். இவ்வாறு புளிக்க வைத்த நீராகாரத்தில் புளிப்பும் காரமும் அதிகரித்தக் கொண்டே வரும். இதைக் காபி என அழைப்பார். காபி தயாரிக்கும் அளவைப் பொறுத்து அது மூன்று மாத அன்னக்காபி, ஆறுமாத அன்னக் காபி என அழைக்கப்படும். இத்தனை வீரியமிக்க நீராகாரம் அல்லது அன்னக்காபி செய்ய நமது பாரம்பரிய அரிசி வகைகளே சிறந்தது. உதாரணமான கைக்குத்தலரிசி, குத்தரிசி சிறந்தது. நிசி நீரினை காலை எழுந்ததும் பல் தூய்மை, வாய்தூய்மை செய்த பின்பு பயன்படுத்தலாம் அல்லது கழிவு நீக்கத்திற்கு பின்பு பயன்படுத்தலாம். மலச்சிக்கல் உள்ளவர்கள் 500 மில்லி முதல் 1500 மில்லி அளவு நீராகாரத்தினை காலையில் பருகிவிட்டு சிறிது நேரம் நடைப்பயிற்சி செய்தல் வேண்டும். இதனால் வயிறு, குடல் பாதைகளைச் சீர் செய்து உடலிற்கு மிகுந்த பலனை கொடுக்கிறது. இதில் அமினோ அமிலங்களும் நன்மை உண்டாக்கும் பூஞ்சைகளும் மிகுதியாக கலந்துள்ளன. Aspartic acid, glutamic acid, Serine, glycine, threonine, aspargine போன்ற முக்கிய அமினோஅமிலங்கள் நிசிநீரில் கலந்துள்ளன.

இவை உடலின் மிக முக்கியமான இயக்கங்களுக்கு அடிப்படையாகும். மூளை இயக்கம், இரத்த அணுக்கள் இயக்கம், நோய் எதிர்ப்பாற்றல் போன்றவற்றிற்கு இவை காரணமாகின்றன. உடலிற்கு நன்மை உண்டாக்கும் பூஞ்சைகளால் நீரிழிவு நோயும் இரத்த அழுத்தமும் கட்டுப்படுகின்றது. உடலில் நோய் எதிர்ப்பாற்றல் அதிகமாகும். ஒவ்வாமையால் வரும் தோல் நோய்களும் மூச்சுப்பாதை நோய்களும் தடுக்கப்படும். நாட்பட்ட குடல் தொடர்பான நோய்கள் தீரும்.

தொடர்ச்சியாக நீராகாரத்தை பருகி வந்தால், இளமை பாதுகாக்கப்படும். தோல், முகச்சுருக்கம் நீங்கும். இவற்றைத் தொடர்ச்சியாக ஞாபகமறதி நோய் உள்ளவர்களுக்கு கொடுத்து வந்தால் நன்மை உண்டாகும். சிலவிதமான நரம்பு சோதியற் பொருட்களின் ஆற்றல் நிசிநீரினால் மேம்படுவதால் அவர்களின் நினைவாற்றல் கூடும். நீரிழிவு நோயாளர்களும் இதனை பருகலாம். நிசிநீரில் உள்ள உட்பொருட்கள் உடல் இயற்றியலில் மிகமுக்கிய பங்காற்றுவதால் நீரிழிவு நோயினால் ஏற்படும் தீய விளைவுகளைத் தடுக்கும். முக்கியமாக முக்கியமாக இன்சுலின் உற்பத்தியினை அதிகப்படுத்தி சர்க்கரையின் பயன்பாட்டினை முறைப்படுத்துவதற்கு நிசிநீரின் உட்பொருட்கள் பயன்படுகின்றன. உதாரணமாகஎலும்புமுறிந்த நிலை, காயம்பட்ட நிலை, நீண்ட நாட்கள் நோயினால் இருந்த சோர்வு போன்றவற்றில் மிகுந்த நன்மை பயக்கும். இதில் நிசிநீருக்கு புளிக்காத மோர், சின்ன வெங்காயம் என்பன கலந்தும் பருகலாம். இவ் மருத்துவ குணங்கள் நிறைந்த நிசிநீர் இனை அமிர்தம் என அழைத்தார்கள்.

# இராசிபலன்

21.04.2023
சித்திரை 08, வெள்ளிக்கிழமை
பிரதமை முற்பகல் 9.37 மணிவரை

பரணி பின்னிரவு 12.11 மணிவரை
சுபநேரம் -6.01-7.31 மணிவரை
இராகுகாலம்-10.31- 12.01 மணிவரை

சந்திராஷ்டமம் -
உத்தரம், அத்தம்

வளவன்

**மேஷம்** குடும்பத்தில் உள்ளவர்கள் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பர், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் எண்ணம் உருவாகும்.

**கடகம்** கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம் பெறலாம், தலைமைப் பொறுப்புக்கள் உங்களை நாடிவரலாம், நண்பர்கள் மத்தியில் பாராட்டும் புகழும் கூடும் நாள்.

**துலாம்** பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், பொது நலன்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**மகரம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக் கிடைக்கும்.

**ரிஷபம்** சுப காரியச் செலவுகளில் ஆர்வம் கூடும், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச் சொல்லுக்கு ஆளாக நேரிடலாம்.

**சிம்மம்** எதிர்ப்புகள் அகன்று வியாபார விருத்தி ஏற்படலாம், சாமர்த்தியமாகப் பேசி சாதனைபடைக்கும் நாள், கொடுக்கல் வாங்கல்களில் உருவான மனஸ்தாபம் அகலும்.

**விருச்சிகம்** அரைகுறையாக இருந்த பணியினை மீதியும் தொடர்வீர்கள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், ஆரோக்கியமான நாள், செய்தொழிலில் மேன்மையுண்டாகும்.

**கும்பம்** பிடிவாதம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது, வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், பக்குவமாய்ப் பேசி காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**மிதுனம்** வருமானம் எதிர்பார்த்தபடியே கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**கன்னி** ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் விரயமாகலாம், தொழிலில் அதிகாரிகளை விமர்சிப்பதைத் தவிர்ப்பது நல்லது, மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும்.

**தனுசு** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லைகளைப் பெறலாம், கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**மீனம்** குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பொது நல ஈடுபாட்டில் ஆர்வம் கூடும்.

உற்சாகமான உழைப்பு இல்லாது உயர் வெற்றி எதையும் சாதிக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினர் வசமுள்ள காணிகளை விடுவிக்கக்கோரி ஆர்ப்பாட்டம்

## ஆளுநருக்கு மகஜரும் கையளிப்பு

(சாவகச்சேரி)

**தமது பூர்வீகக் குடியிருப்பு நிலங்களை விடுவிக்கக் கோரி நேற்று வியாழக்கிழமை வட மாகாண பெண்கள் குரல் அமைப்பு மற்றும் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் ஆகியன வடமாகாண ஆளுநர் செயலகம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டதுடன் ஆளுநருக்கான மகஜர் ஒன்றினையும் செயலாளரிடம் கையளித்துள்ளனர்.**

குறித்த மகஜரில், வட மாகாண பெண்களாகிய நாம் எமது பூர்வீக குடியிருப்பு நிலங்களை விடுவிப்பதற்கான வேண்டுகோளை ஒன்றிணைந்து முன்வைக்கின்றோம்.

கடந்த 30 வருடங்களாக இடம்பெற்ற யுத்தம் காரணமாக நாம் குடியிருந்த மற்றும் தொழில் புரிந்து வந்த பூர்வீக நிலங்களை பாதுகாப்பு தேவைக்காக பிடித்து வைத்துள்ளனர்.

யுத்தம் முடிவுக்கு வந்து 13 வருடங்க்களை கடந்து விட்ட போதிலும் இன்னும் எமது நிலங்கள் விடுவிக்கப்படா்மல் உள்ளன். தற்போது எமது நிலங்கள் படையினர் வசமே உள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 5886 ஏக்கரும், மன்னாரில் 654 ஏக்கரும், கிளிநொச்சியில் 1345 ஏக்கரும், யாழ்ப்பாணத்தில் 4450 ஏக்கர் நிலமும் விடுவிக்கப்பட வேண்டியுள்ளன.




இதை தவிர அரசாங்கம் புதிய வழிமுறைகள் மூலம் புதிய நில ஆக்கிரமிப்புக்களையும் மேற்கொண்டு வருகின்றது. அதனை நாம் வன்மையாக கண்டிக்கிறோம்.

எமது காணிகளை விடுவிக்கக்கோரி பல தடவைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் எமக்கு சரியான தீர்வு கிடைக்கவில்லை. இதனால் தொடர்ந்தும் நாம் பெரும் ஏமாற்றத்தை எதிர்கொண்டு வருகின்றோம்.

அத்துடன் நாம் பெரும் பொருளாதார நெருக்கடிக்கும் முகம் கொடுத்து வருகிறோம்.

எனவே தயவு கூர்ந்து எமது நிலங்களை விடுவித்து பெண்களதும் எதிர்கால சந்ததியினரதும் வாழ்வாதாரத்தையும் - பாதுகாப்பையும் மேம்படுத்த ஒத்துழையுங்கள் என மேலும் அவர்கள் தமது கோரிக்கை கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர். (4-6-30-33)



சுன்னாகம் பொலிஸ் நிலையத்தின் புதிய பொறுப்பதிகாரியாக எம்.எப்.எம்.பிர்டவுஸ் அண்மையில் தனது கடமையை பொறுப்பேற்றார். இவர் முன்னர் பருத்தித்துறை, நெல்லியடி, வல்வெட்டித்துறை, வத்தளை, கொழும்பு ஆகிய பொலிஸ் நிலையங்களில் பொறுப்பதிகாரியாக பணியாற்றினார்.

## சித்திரை பரணி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண் வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான சித்திரை பரணி உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை 3.30 மணிக்கு நடைபெறும்.

இதன்போது வைரவருக்கு அபிஷேகம், மூல மூர்த்தி பூஜை, விசேஷ பூஜை நடைபெறும் என பிரதம குரு சிவஸ்ரீ து.விவேகானந்தக்குருக்கள் அறிவித்துள்ளார். (4-6)

# பிறந்தவுடன் இறந்த சிசு; மேலும் மூவரிடம் சாட்சியம் பதிவு

(கரணவாய்)

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் குழந்தை ஒன்று பிறந்து இறந்தமை தொடர்பில் மேலும் மூவரிடம் நேற்று முன்தினம் புதன் கிழமை பருத்தித்துறை நீதிமன்றத்தில் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

கர்ப்பிணிப் பெண் ஒருவர் கடந்த 11 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் குழந்தை பிரசவித்த நிலையில் குழந்தை உயிரிழந்திருந்தது. இம் மரணம் தொடர்பில் மறுநாள் 12 ஆம் திகதி புதன்கிழமை பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா விசாரணை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டிருந்தார்.

மருத்துவர்களின் அசண்டையீனம் காரணமாக மரணம் ஏற்பட்டதாக தெரிவித்து, மரண விசாரணை அதிகாரி மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்திற்கு அறிக்கையிட்டதன் பிரகாரம் கடந்த செவ்வாய்க்கிழமை நீதவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை முன்னிலையில் வைத்தியர்கள் இருவரிடம் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

நேற்று முன்தினம் புதன் கிழமை மீண்டும் நீதவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை முன்னிலையில் குழந்தை பிரசவித்த தாய் மற்றும் இரண்டு குடும்ப நல உத்தியோகத்தரிடம் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

சட்ட வைத்திய அதிகாரி உட்பட இருவர் சாட்சியமளிக்க உள்ளதால் எதிர்வரும் திங்கட்கிழமை வரை இம் மரண விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. (4-6-60)

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் சமூக விஞ்ஞானத்தில் உயர் சான்றிதழ் (Advanced certificate in social sciences) கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 18 வயதிற்கு மேற்பட்டவராக இருப்பதுடன் தரம் ஒன்பதினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை https://ou.ac.lk/advesose என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து 01.05.2023 வரை விண்ணப்பிக்க முடியும்.இக் கற்கை நெறியினை தமிழ் அல்லது ஆங்கிலத்தில் தொடர முடியும் என்பதுடன் பரீட்சார்த்தியின் கல்விமட்டத்தினைப் பொறுத்து ஒன்று அல்லது இரண்டு வருடங்கள் தொடர முடியும்.

இந்தக் கற்கை நெறியினை பூர்த்தி செய்பவர்கள் திறந்த பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்புக்களை (Degree programs) தொடர முடியும்.

மேலதிக விபரங்களிற்கு யாழ்ப்பாணம் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவில் எனும் முகவரியூடாகவும் மற்றும் 021 -222 3374 தொலைபேசியூடாகவும் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணம் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (4)

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் சமூக விஞ்ஞானத்தில் கலைமாணிப்பட்டம் (Bachelor of Arts in social sciences) கற்கைநெறி இளைஞர் மற்றும் சமூக அபிவிருத்தியில் கலைமாணிப்பட்டம் (Bachelor of Arts in youth and community Development) கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 18 வயதிற்கு மேற்பட்டவராக இருப்பதுடன் க.பொ.த (உ/த) பரீட்சையில் ஏதாவது ஒரு துறையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் அடிப்படை கற்கை நெறி சான்றிதழை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை www.ou.ac.lkஎன்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து 01.05.2023 வரை விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக விபரங்களிற்கு யாழ்ப்பாணம் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவில் எனும் முகவ்ரியூடாகவும் மற்றும் 021 -222 3374 தொலைபேசியூடாகவும் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணம் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (4)

## தந்தை செல்வாவின்

# 46 ஆவது நினைவு நாளும் நினைவுப் பேருரையும்

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின் 46 ஆவது நினைவு நாள் அஞ்சலியும் நினைவுப் பேருரையும் எதிர்வரும் 26 ஆம் திகதி புதன் கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் தந்தை செல்வா நினைவிடத்தில் தந்தை செல்வா நினைவு அறங்காவலர் குழு தலைவர் ஓய்வு நிலை ஆயர் கலாநிதி. சு.ஜெபநேசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.(4)

# வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானம் கும்பாபிஷேகம் எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.40 மணிமுதல் 10.40 மணிவரை நடைபெறும் என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (4)

# இருப்பாலை வீரகத்தி விநாயகர் ஆலய அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி வடக்கு (சராசாளி) அருள்மிகு ஸ்ரீ சித்தி வேலாயுதர் தேவஸ்தானத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

வேட்டைத் திருவிழா எதிர்வரும் 2 ஆம் திகதியும் சப்பறத் திருவிழா 3 ஆம் திகதியும் தேர்த்திருவிழா 4 ஆம் திகதியும் தீர்த்தத்திருவிழா மறுநாள் 5 ஆம் திகதியும் நடைபெறும் என ஆலய பரிபாலனை சபை அறிவித்துள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதையூட்டும் டொபி பாவனை

# மாணவர் மத்தியில் அதிகரிப்பு

## மருத்துவர் அதிர்ச்சித் தகவல்

**(கொழும்பு)**

**இலங்கையில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை, புகையிலை பொருட்கள் மற்றும் போதையூட்டும் டொபி பாவனை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.**

காலி மாவட்ட சமூக விசேட மருத்துவ நிபுணர் கலாநிதி அமில சந்திரசிறி மற்றும் ருஹூனு பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானப் பிரிவின் விரிவுரையாளர் இஷார வன்னியாராச்சி உள்ளிட்ட குழுவினர் நடத்திய ஆய்வில் இது தெரியவந்துள்ளது.

தென் மாகாணத்தில் பாடசாலை மாணவர்களிடையே இதுவரை ஐஸ் ஹெரோயின் போன்ற கடுமையான போதைப் பொருள் பாவனை பதிவாகவில்லை.

எனினும் பாடசாலைகளில் தரம் 9 - 10 ஆம் வகுப்புகளில் கற்கும் மாணவர்களிடையே இவ்வாறான போதைக்கு பலியாகும் அபாயம் அதிகம் என இந்த சமீபத்திய ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடையே உள்ள தூரமும், பிள்ளைகள் மீது கவனம் செலுத்தாமல் இருப்பதுமே இந்த நிலைமைக்கு முக்கிய காரணம் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (நி)

## வெப்பமான காலநிலை மாத இறுதி வரை நீடிக்கலாம்

### வளிமண்டல திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

நிலவும் வெப்பமான காலநிலை இம்மாத இறுதி வரை நீடிக்கலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் வடமேற்கு மாகாணங்களில் நேற்று அதிக வெப்பமான காலநிலை நிலவியதாக அந்த திணைக்களத்தின் ஆராய்ச்சி மற்றும் காலநிலை மாற்ற பணிப்பாளர் அனுஷ வர்ணசூரிய தெரிவித்துள்ளார்.

அந்த மாகாணங்களுக்கு மேலதிகமாக மொனராகலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் இந்த வெப்பமான காலநிலை எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தற்போதைய சூழ்நிலையில் பெரியவர்கள் மற்றும் சிறுவர்களும் தண்ணீர் அருந்துவது அத்தியாவசியமானது என கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளுக்கு சிறுவர்களை அனுப்பும் பெற்றோர், குறைந்த இரண்டு தண்ணீர் போத்தல்களையேனும் அவர்களுக்கு கொடுத்து அனுப்ப வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

நிறமூட்டப்பட்ட செயற்கை பானங்களை தவிர்த்து, நீர் உள்ளிட்ட இயற்கையான பானங்களை அதிகளவில் அருந்த வேண்டும். குறைந்தது நாளொன்றில் இரண்டு முறையாவது நீராட வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன், காலை 10 மணி முதல் மாலை 3 மணிவரையான காலப்பகுதியினும், அதிகளவில் வெளியில் நடமாடுவத்தை தவிர்த்துக் கொள்ளுமாறு சுகாதார மேம்பாட்டுப் பணியகம் கோரியுள்ளது. (நி)


### பெயர்மாற்ற அறிவித்தல்

2 ஆம் திட்டம், இளங்கோபுரம், விசுவமடு எனும் முகவரியைக் கொண்ட செந்தமயில் ஆகிய எனது பெயரை இன்று முதல் செந்தமிழ்செல்வி என பெயர்மாற்றம் செய்கின்றேன்.
இனிவரும் காலங்களில் செந்தமிழ்செல்வி எனும் பெயரையே எனது சகல ஆவணங்களிலும் பயன்படுத்துவேன் என இலங்கை சனநாயக்க குடியரசில் வாழும் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள,
ரா.செந்தமிழ்செல்வி
(15310)

### பெயர்மாற்ற அறிவித்தல்

இல 135, உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி எனும் முகவரியை உடைய சர்மிளா ஜெயக்கொடி ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து சர்மிளா என பெயர்மாற்றம் செய்கின்றேன்.
இனிவரும் காலங்களில் எனது சகல ஆவணங்களிலும் சர்மிளா எனும் பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை வாழ் சனநாயக்க குடியரசில் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள,
வ.சர்மிளா
(15307)


### பேருந்து விபத்தில் 10 பேர் படுகாயம்

(புத்தளம்)

புத்தளம் - கொழும்பு பிரதான வீதியில், வென்னப்புவ நைனா மடம் கிங்கோயா பாலத்துக்கு அருகில் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தொன்று விபத்துக்குள்ளாகியதில் 10 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து சம்பவம் நேற்று பதிவாகியுள்ளது.

குறித்த பேருந்தானது பாலத்தின் பக்கவாட்டு வேலியில் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து சீமெந்து கலவை ஏற்றிச் சென்ற லொறியும் குறித்த பேருந்து மீது பின்புறத்தில் மோதியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த விபத்து சம்பவம் தொடர்பில் வென்னப்புவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு [illegible] கது. (நி)

## பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்திற்கு எதிராக திருமலையில் ஆர்ப்பாட்டம்

(திருமலை)

இலங்கை அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள பயங்கர வாத எதிர்ப்பு சட்ட மூலத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டம் திருகோணமலை மாநகர சபைக்கு முன்பாக நேற்று இடம்பெற்றது.

வடக்கு - கிழக்கு பெண்கள் கூட்டின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட குறித்த போராட்டத்தில் பெருந்திரளான பெண்கள் பங்கேற்று தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தியிருந்தனர்.

கடந்த காலத்தில் இலங்கை மக்கள் அனுபவித்து வரும் மனித உரிமை மீறல்களை இன்னும் பல மடங்கு அதிகரிக்கும் நோக்கத்தோடு பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு மாற்றீடாக அதனை விட கொடிய சட்டத்தை இலங்கை அரசாங்கம் முன்மொழிந்திருக்கின்றது என குறிப்பிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (நி)


### வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி
### சந்தை, இறைச்சிக்கடைக்கான 01.05.2023-31.12.2023 வரையுள்ள காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல்-2023

01. கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 21/04/2023 இல் இருந்து 27/04/2023 ஆம் திகதி பி.ப.3.00 மணி வரை
02. கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி :-28/04/2023 காலை 10.00 மணி வரை
03. கேள்விகள் திறக்கப்படும் திகதி :-28/04/2023 காலை 10.30 மணிக்கு. வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட சந்தை, இறைச்சிக்கடைகளுக்கான கேள்வி அறிவித்தல் 22/10/2022 ஆம் திகதிய தினக்குரல், வலம்புரிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.
04. கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதி அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் தன்மை குறிப்பிட்டு, உரிய தினத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ, அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். அதன் இரண்டாவது பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.
05. கேள்விப் பத்திரங்கள் பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையை கொண்டு வருவதுடன், அதன் நிழற்படப் பிரதியையும், கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும்.
06. மேலதிக விபரங்களை அந்தந்த உப அலுவலகங்களிலும், தலைமை அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

2023 ஆம் ஆண்டு சந்தைக் குத்தகை மீள் கேள்வி விபரம்

| தொ.இல | குத்தகை விபரம் | 2023ஆகக் குறைந்த மீள்கேள்வித் தொகை(வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம்(1%) | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரக் கட்டணம் | மாத வாடகை |
|---|---|---|---|---|---|
| | நெல்லியடி உப அலுவலகம் | | | | |
| 1 | நெல்லியடி கோழி இறைச்சிக்கடை | 404,400.00 | 4,044.00 | 500.00 | 100.00 |
| | உடுப்பிட்டி உப அலுவலகம் | | - | | |
| 1 | உடுப்பிட்டிச் சந்தை கோழி இறைச்சிக்கடை | 166,800.00 | 1,668.00 | 500.00 | 100.00 |
| 2 | மண்டான் சந்தை | 28,400.00 | 284.00 | 500.00 | 100.00 |

கணேசன் கம்ஸநாதன்
செயலாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.
21/04/2023.
(C-6395)


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 250 | 250 | 250 | 250 |
| உருளைக்கிழங்கு | 180 | 150 | 170 | 180 |
| பச்சைமிளகாய் | 320 | 300 | 300 | 300 |
| தக்காளி | 100 | 120 | 120 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 180 | 200 |
| கோவா | 160 | 150 | 180 | 250 |
| கரட் | 150 | 200 | 150 | 300 |
| பூசணி | 60 | 60 | 50 | 40 |
| புடோல் | 150 | 140 | 140 | 140 |
| வாழைக்காய் | 100 | 100 | 120 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 320 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 130 | 130 |
| பாகற்காய் | 400 | 260 | 350 | 300 |
| வெண்டக்காய் | 250 | 140 | 160 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 120 |
| பயற்றங்காய் | 100 | 120 | 100 | 100 |
| லீக்ஸ் | 250 | 260 | 300 | 300 |
| பீற்றூட் | 160 | 180 | 180 | 200 |
| கறிமிளகாய் | 200 | 250 | 200 | 300 |
| முருங்கைக்காய் | 450 | 600 | 400 | 800 |
| போஞ்சி | 250 | 200 | 240 | 250 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | 280 | 200 |
| கீரை - 1 பிடி | 100 | 140 | 100 | 120 |
| தேசிக்காய் | 350 | 500 | 400 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 90 | 70-100 |
| இராசவள்ளி | 250 | 250 | 250 | 300 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 60 | 100 | — | 300 |
| பொன்னாங்காணி | 80 | 120 | — | 50 |
| வல்லாரை | 40 | 25 | 20 | 50 |
| ஈரப்பலா | 80 | — | — | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் புத்தாண்டுப் பலன்கள்

## 14.04.2023-13.04.2024

# நினைத்த காரியங்கள் நினைத்தபடி நிறைவேறும்!

## ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்



**துவளாத மனதிற்கு சொந்தக் காரர்களாக விளங்கும் துலாம் இராசி வாசகர்களே!**

நீதிக்கும், நேர்மைக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் உங்களுக்கு, சோபகிருது வருடப் புத்தாண்டின் தொடக்கம் சிறப்பாகவே இருக்கின்றது. முயற்சியின் மூலம் வளர்ச்சியை அதிகரித்துக்கொள்ள வாய்ப்புகள் கைகூடிவரும். ஆண்டின் தொடக்கத்தில் ஜென்ம இராசியில் கேதுவும், ஏழாம் இடத்தில் இராகுவும் இருக்கின்றார்கள். ஆறாம் இடத்தில் குரு பகவான் மீன இராசியில் தன்'சொந்த வீட்டில் சஞ்சரிக்கின்றார். "ஆறில் குரு ஊரில் பகை" என்பது பழமொழி. பகைக்கு மத்தியில் உங்கள் வாழ்க்கையில் மிகப்பெரிய முன்னேற்றம் காணப்போகிறீர்கள். பஞ்சம ஸ்தானத்தில் சனி பகவான் சொந்த வீட்டில் சஞ்சரிக்கின்றார். எனவே பூர்வ புண்ணிய ஸ்தானம் வலுப்பெறுகின்றது. இருப்பினும் கும்பத்தில் இருந்து மகரத்திற்கு வக்கிர இயக்கத்தில் வரும் சனி, அங்கிருந்து மீண்டும் கும்ப இராசிக்கு 20.12.2023 இல் செல்கின்றார். எனவே பூர்வீகச் சொத்துக்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகல வழிபிறக்கும். அண்ணன், தம்பிகளின் உறவு சீராகி பாகப்பிரிவினைக்கு வித்திடும். இடையில் 3 முறை சனி-செவ்வாயின் பார்வை ஏற்படுகின்றது. முரண்பாடான கிரகங்களின் பார்வை என்பதால் அதுபோன்ற நேரங்களில் கொஞ்சம் கவனமாகவே செயற்பட வேண்டும். வம்பு, தும்புகள் வாசல் தேடி வரலாம். சரளமான பொருளாதார நிலை சரிவை நோக்கிச் செல்லலாம். 8.10.2023 இல் மீன இராசிக்கு ராகு செல்கின்றார். அதே சமயம் உங்கள் இராசியில் சஞ்சரித்து வந்த கேது, கன்னி இராசிக்கு பின்னோக்கிச் செல்கின்றார். இந்த மாற்றங்களின் அடிப்படையில் தான் உங்களுக்கு பலன்கள் அமையப் போகின்றது. உங்கள் சுய ஜாதகத்தில் வலிமை வாய்ந்த திசாபுத்திகள் நடைபெற்றால் நினைத்த காரியங்கள் நினைத்தபடி நிறைவேறும். அல்லாத பட்சம் திசாபுத்தி பலமிழந்து இருந்தால் எவ்வள்வு முயற்சி செய்தாலும் அந்தக் காரியம் முடிவடையாது. எனவே அதுபோன்ற நேரங்களில், யோகபலம் பெற்ற நாளைத் தேர்ந்தெடுத்து வரம் தரும் தெய்வங்களை தேடிச் சென்று வழிபட்டால் வளர்ச்சிக்கு எந்த இடையூறும் வராது.

### குருப்பெயர்ச்சி!

சித்திரை 9 ஆம் திகதி (22.4.2023) அன்று மேஷ இராசிக்கு குரு பகவான் வருகின்றார். உங்கள் இராசிக்கு சப்தம ஸ்தானத்தில் வரும் குருபகவானின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். அனைத்துக் காரியங்களிலும் வெற்றி கிடைக்கும். குருவின் பார்வை 3, 11 ஆகிய இடங்களிலும் பதிகின்றது. உங்கள் இராசிநாதன் சுக்கிரனுக்கு குரு பகவான் பகை கிரகமாக இருந்தாலும் அதன் பார்வைக்கு பலன் கிடைக்கும். ஆரோக்கிய தொல்லைகள் நீங்கும். சகாய ஸ்தானத்தில் குருவின் பார்வை பதிவதால் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தோள்கொடுத்து உதவும் நண்பர்கள் வாழ்க்கைத் தேவையைப் பூர்த்தி செய்வர். மூடிக் கிடந்த தொழிலுக்கு திறப்பு விழா நடத்துவீர்கள். வீண் விரோதங்களில் இருந்து விடுபடும் வாய்ப்பும், வெற்றிச் செய்திகளை கேட்கும் சூழலும் இனி அமையும். லாப ஸ்தானத்தைக் குருபகவான் பார்ப்பதால் தொழில் வளர்ச்சி திருப்தி தரும். வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைக்கும். திருமணப் பேச்சுக்கள் முடிவடையும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். வெளிநாட்டிலுள்ள நல்ல நிறுவனங்களில் பணிபுரிய அழைப்புகள் உங்களைத் தேடி வரலாம்.

### கும்பச்சனி!

கிரகங்களில் வலிமை வாய்ந்தவர் சனி பகவான். வருடத் தொடக்கத்திலேயே அவர் 5 ஆம் இடத்தில் சஞ்சரிக்கின்றார். கும்ப இராசி சனிக்குச் சொந்த வீடாகும். பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சனி சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் பூர்வ புண்ணியத்தின் பலனாக கிடைக்க வேண்டிய அனைத்து யோகங்களும் வந்து சேரும். சொத்துக்களால் லாபம், சொந்தங்களால் மேன்மை என அத்தனையும் கிடைக்கும். பிள்ளைகளின் சுபகாரியப் பேச்சுக்கள் கைகூடுவது, அவர்களின் மேற்படிப்பிற்கான ஏற்பாடுகள் நிறைவேறுவது போன்றவை நடக்கும் நேரமிது. விரும்பிய படியே தொழிலும், பொருளாதாரமும் அமையும். கும்பத்தில் சஞ்சரிக்கும் சனி இடையில் வக்கிரமும் பெறுகின்றார். பின்னர் 24.8.2023 முதல் மகரத்திற்கு வந்தும் வக்கிரம் பெறுகின்றார். அங்கிருந்து மீண்டும் 20.12.2023 இல் கும்ப இராசிக்கு முறையாகப் பெயர்ச்சியாகிச் செல்கின்றார். இந்த வக்கிர காலத்தில் சொத்துக்களாலும், சொந்தங்களாலும் பிரச்சினை ஏற்படும். வெற்றிக்குரிய செய்திகளை எதிர்பார்த்திருந்த உங்களுக்கு வேறுவகையான செய்திகள் வரலாம். அத்தனைக்கும் மேலாக ஆரோக்கியத்தில் தொல்லை, அலுவலகப் பணியில் குழப்பம், தொழில் பங்குதாரர்களால் இடையூறு நடைபெற்று மனக்கலக்கத்தை உருவாக்கும். இக்காலத்தில் சனிக்குரிய ஸ்தலங்களுக்கு சென்று வழிபட்டு வருவது நல்லது.




### ராகு-கேது பெயர்ச்சி!

8.10.2023 அன்று மீன இராசியில் ராகுவும், கன்னி இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகின்றார்கள். உங்கள் இராசியில் சஞ்சரித்து வந்த கேது விலகுவது யோகம் தான். 6 இல் ராகு இருந்து, குரு கேந்திரத்தில் இருந்தால் "அஷ்டலட்சுமி யோகம்" உருவாகும் என்பர். எனவே பொருளாதாரத்தில் இருந்த நெருக்கடி அகலும். புதிய திருப்பங்கள் பலவும் காண்பீர்கள். தொழில் சூடுபிடிக்கும். வீடு கட்டுவது, கட்டிய வீட்டைப் பழுது பார்ப்பது போன்றவற்றில் கவனம் செலுத்துவீர்கள். வாகன யோகம் உண்டு. விரய கேதுவின் ஆதிக்கத்தால் விரயங்கள் அதிகரித்தாலும், ஆன்மிகப் பணிக்கும் அள்ளிக் கொடுக்க முன்வருவீர்கள். முன்னோர் கட்டிவைத்து சிதிலமடைந்த கோவில்களை முறையாகப் பராமரிக்கும் எண்ணம் கைகூடும். இல்லத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை வாங்கும் யோகம் கிட்டும். உத்தியோகத்தில் நினைத்த இடத்திற்கு மாறுதலும், ஊதிய உயர்வும் கூட வரலாம். எதையும் திட்டமிட்டுச் செய்து வெற்றி காண்பீர்கள். தெய்வ தரிசனங்களுக்காக அடிக்கடி பயணங்களையும் மேற்கொள்வீர்கள். ராகு-கேதுக்களால் நற்பலன்களை மேலும் பெற இதுபோன்ற காலங்களில் சர்ப்ப சாந்தி பரிகாரங்களை யோகபலம் பெற்ற நாளில், அனுகூல ஸ்தலங்களைத் தேர்ந்தெடுத்துச் செய்வது நல்லது.

### வளர்ச்சி தரும் வழிபாடு!

புத்தாண்டில் நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வர வியாழக்கிழமை தோறும் குரு கவசம் பாடி குரு பகவானை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்!

இந்தப் புத்தாண்டின் வருடத் தொடக்கத்தில் கொஞ்சம் கவனமாக செயற்பட வேண்டும். குருப்பெயர்ச்சிக்குப் பிறகு இல்லத்தில் நல்ல காரியங்கள் நடைபெறும். வருமானப் பற்றாக்குறை அகலும். வாழ்க்கைத் துணைக்கும் வேலை கிடைத்து மகிழ்ச்சியடைவீர்கள். பொருளாதாரத்தில் இதுவரை இருந்த பற்றாக்குறை அகலும். உங்கள் பெயரிலேயே அசையா சொத்துக்கள் வாங்கும் முயற்சி கைகூடும். ராகு-கேது பெயர்ச்சிக்குப் பிறகு ஜென்ம கேது விலகியதும் நன்மைகளை அதிகம் எதிர்பார்க்கலாம். விட்டுப் போன உறவுகள் மீண்டும் வந்திணையும். வெளியூர்ப் பயணங்களால் வெகுமதி கிடைக்கும். பணிபுரியும் பெண்களுக்கு இனிமை தரும் இடமாற்றங்களும், எதிர்பார்த்த ஊதிய உயர்வும் உண்டு.

### குரு-சனி வக்கிரம்!

12.9.2023 முதல் 20.12.2023 வரை மேஷத்தில் குரு வக்கிரம் பெறுகின்றார். இக்காலம் உங்களுக்கு யோக காலமாகும். இராசிநாதன் சுக்கிரனுக்கு, குரு பகை கிரகம் என்பதால் அதன் வக்கிர காலத்தில் வளர்ச்சி கூடுதலாகவே இருக்கும். நினைத்தது நிறைவேறும். தொழில் வளர்ச்சியும், வரவில் திருப்தியும் ஏற்படும். பிள்ளைகளின் முன்னேற்றத்தில் அக்கறைகாட்டி மகிழ்வீர்கள். அரசியல் வாழ்க்கை சிறப்பாக அமைந்து அதிகாரப் பதவியும் வந்து சேரும். இதுவரை நீங்கள் எதிர்பார்த்து நடைபெறாது இருந்த காரியங்கள் ஒவ்வொன்றும் சிறப்பாக நடைபெறும். குறிப்பாக கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும். 27.6.2023 முதல் 23.8.2023 வரை கும்ப இராசியிலும், 24.8.2023 முதல் 23.10.2023 வரை மகரத்திலும் சனி வக்கிரம் பெறுகின்றார். இந்த வக்கிர காலங்களில் பிரச்சினைகளை அதிகம் சந்திக்க நேரிட்டாலும் தன்னம்பிக்கையோடும், தைரியத்தோடும் அதை எதிர்கொள்வீர்கள். ஆரோக்கியத் தொல்லை அகலும். வெளிநாட்டு முயற்சி கைகூடும். பிள்ளைகள் வழியில் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். தொழில் பங்குதாரர்கள் விலகினாலும் புதியவர்கள் வந்து இணைவர். நீண்ட கால எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம். பழைய வாகனங்கள்ளக் கொடுத்து விட்டுப் புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சி வெற்றி தரும். பிறருக்கு பொறுப்பு சொல்வதைத் தவிர்ப்பது நல்லது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 130

# தந்தையின் மீது இருந்த நம்பிக்கை

ஒரு வணிகர் விமான நிலையத்திற்கு மிக தாமதமாக வருகையில். போர்டிங் வாயில் மூடப்படும் நிலையைக் கண்டதும் அவசரமாக வியர்வை மற்றும் மூச்சுவாங்க ஓடி போர்டிங் பாஸ் ஸ்கேன் செய்து கொண்டு விரைந்து விமானத்தில் ஏறினார். உள்ளே சென்று தனது இருக்கையினை பார்த்தால் அது மூன்று பேர் அமரும் இருக்கை ஒரு நடுத்தர வயது பெண் ஜன்னலோரமும், நடைபாதை அருகே ஒரு சிறுமியும் இருந்தார்கள். இவர் அவர்கள் இருவரையும் பார்த்து புன்னகைத்தவாறே தனது பெட்டியை மேலே வைத்து விட்டு நடுவில் அமர்ந்தார்.

அந்த சிறுமியை பார்க்கும்போது தனது மகளை நினைத்தார். இருவருக்கும் ஒரே வயதுதான் இருக்கும். அந்த சிறுமி அமைதியாக வண்ணம் தீட்டி கொண்டிருந்தாள். அந்த வணிகரும் எப்போதும் போல் பேர் என்ன பொழுதுபோக்கு என்ன என்று சிறுமியிடம் பேச்சு கொடுத்துக்கொண்டே வந்தார்.

அதே போல் உனக்கு பிடித்த விலங்கு எது போன்ற ஒரு சில வழக்கமான கேள்வியும் கேட்டு பேசிக்கொண்டு இருந்தார். அவர் மனதில் இந்த சிறுமி தனியாக பயணம் செய்வது விசித்திரமாகபட்டது.

ஆனால் அவர் தன்னை தனது எண்ணங்களை தன்னுள்ளே புதைத்து வைத்துக்கொண்டார். எனினும் பயணம் முழுவதிலும் சிறுமி மீது ஒரு கண் வைக்கவேண்டும் என நினைத்தார்.

சுமார் ஒரு மணி நேர பயணத்திற்கு பின் விமானம் திடீரென குலுங்க தொடங்கியது . பைலட் ஒலிப்பெருக்கியின் மூலம் பயணிகளிடம் நாம் கடினமான வானிலையை எதிர் கொண்டிருக்கிறோம் தங்கள் இருக்கை பட்டிகளை போட்டுகொண்டு அமைதியாக இருக்க வேண்டும் என்று அனைவருக்கும் கூறினார்.

அடுத்த அரை மணி நேரத்திற்கு மேல் பல முறை விமானம் குலுக்க, கடுமையான தாழ்நிலைகளும் மற்றும் திருப்பங்களை செய்து கொண்டும் சென்றது. சிலர் உயிர் பயத்தில் அழுது கொண்டு இருந்தனர். மற்றும் பலர் பக்கத்து இருக்கை பெண்மணிபோல் பிரார்த்தனை செய்துகொண்டிருந்தனர்.

இத்தனை விசயங்கள் நடந்தபோதும் அந்த சிறுமி மிகவும் அமைதியாக இருந்தாள். அவள் கலரிங் புக் பென்சில் எல்லாத்தையும் பையினுள் வைத்து விட்டு அமைதியான முகத்துடன் இருந்தாள். இவருக்கோ ஆச்சரியம் தாங்கவில்லை.

இவ்வாறாக ஒரு வழியாக விமானம் தன்னிலை அடைந்தது. மீண்டும் பைலட் நிலைமை சுமூகமானதையும் இன்னும் சற்று நேரத்தில் தரை இறங்க போவதாகவும் அறிவித்தார். அத்தனை பயணிகளிடம் இருந்தும் ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது.

பின் அவர் அந்த சிறுமியை நோக்கி பாராட்டுதலாக இந்த சிறுவயதில் உனக்கு எவ்வளவு மனதைரியம் பெரியவர்கள் அனைவரும் பதட்டத்துடனும் பயத்துடனும் இருக்கும்போது நீ மட்டும் எப்படி இவ்வளவு அமைதியாக இருந்தாய் என கேட்க சிறுமி சிரித்துக் கொண்டே சொன்னால் பைலட் என் தந்தை அவர் எப்படியும் என்னை கவனமாக தரையிறக்குவர் என எனக்கு தெரியும் எனவே நான் பயப்படவில்லை என கூறினாள்.


சிறுமி தன் தந்தையின் மீது இருந்த நம்பிக்கை நம்மில் பலருக்கு நாம் வணங்கும் தெய்வத்தின் மீது கூட இல்லை.

நம்பிக்கைவாழ்க்கைக்கு முக்கியமானதாகும். நம்பிக்கையின் அஸ்திவாரத்தில்தான் இந்தச் சமூக அமைப்பு சுழன்று கொண்டிருக்கிறது. பெரிய வலைப் பின்னல்களைப் போல, ஒவ்வொருவருக்கிடையேயும் மெல்லிய நூலிழை போன்ற நம்பிக்கை இழையோடிக் கொண்டிருக்கிறது. ஒவ்வொருவருக் கிடையேயும் எந்த பந்தமோ, உறவோ, சம்பந்தமோ இல்லாவிட்டாலும், நம்பிக்கை என்ற நூலிழையில் எல்லோரும் பிணைக்கப்பட்டிருக்கிறோம்.

யானையின் பலம் தும்பிக்கையிலே
மனிதனின் பலம் நம்பிக்கையிலே

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிராக நேற்று போராட்டம்




(யாழ்ப்பாணம்)

**பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தினை எதிர்த்து நேற்று வியாழக்கிழமை வடக்கில் உள்ள 5 மாவட்டங்களிலும் வடக்கு கிழக்கு பெண்கள் கூட்டு அமைப்பின் ஏற்பாட்டில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**

"சிறுபான்மையினரை அடக்க புதிய சட்டத்தை உருவாக்காதே, அச்சமின்றி வாழ விடுங்கள், மனித உரிமைகளுக்கு மதிப்பளியுங்கள், அச்சுறுத்தும் சட்டங்களை உருவாக்கி மனித உரிமை செயற்பாட்டாளர்களை முடக்காதே, மக்களை வதைக்கும் சட்டங்களை உருவாக்காதீர் இந் நாட்டில் சுதந்திரமாக வாழ வழிவிடுங்கள் மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் வேண்டாம்"

உள்ளிட்ட சுலோகங்களை ஏந்தியவாறு கவன யீர்ப்புப் போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

போராட்டத்தில் சட்டத்தரணிகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், மகளிர் அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றிருந்தனர். (4-6-30-33-100-250-285-316)

# விடுவிக்கப்பட்ட காணிகளை பயன்படுத்த அப்பகுதி மக்களுக்கே முன்னுரிமை

## அபிவிருத்தி குழு கூட்டத்தில் தீர்மானம்

(குருமன்காடு)

காணிகள் விடுவிக்கப்படும் போது அதே கிராம மக்களுக்கு முன்னுரிமையளித்து வழங்குவதுடன், ஏனையவற்றை மாவட்டத்திற்குள் காணியற்றவர்களுக்கு வழங்க வேண்டும் என வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலக அபிவிருத்திக் குழு கூட்டம் மாவட்ட அபிவி ருத்திக் குழுத்தலைவரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் தலைமையில்நேற்று இடம்பெற்றது. இதன் போதே குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும் அங்கு இடம் பெற்ற கலந்துரை யாடலின் போது, எதிர்வரும் யூன் மாத இறுதிக்குள் வனவள பிரச்சினைகள் தொடர்பான பட்டியலை தயார் செய்து முடிக்க அமைச்சு முடிவெடுத்துள்ளது.

இதனால் கிராம சேவையாளருடன் இணைந்து வனவள பிரச்சனைகளை, கிராம அமைப்புகளுக்கு தெரிவித்து வனவள அதிகாரிகள் நேரடியாக சென்று பார்வையிட்டு அறிக்கை தயாரிக்க விரைவாக செயற்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

காணிகள் விடுவிக்கப்படும் போது, அதே கிராம மக்களுக்கு முன்னுரிமையளித்து வழங்கி மிகுதியை ஏனையவர்களுக்கு குறிப்பாக வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கவேண்டும் எனவும், மெனிக்பாமில் உளுந்து செய்கை செய்யும் காணியை ஒருவருக்கு ஒரு ஏக்கர் வீதம் வழங்கி, பலர் பயன்பெற செய்ய வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (4-6-250)

# சிவாஜி கணேசன் நூல் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் குறித்து தமிழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர் முனைவர் மருதுமோகன், சென்னை பல்கலைக்கழகத்தில் ஆய்வு செய்து எழுதிய "சிவாஜி கணேசன்" எனும் நூலின் அறிமுக விழா நாளை மறுதினம் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் எஸ். ரகுராம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தொடக்கவுரையை இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் நிகழ்த்துவார் அதனைத் தொடர்ந்து "நீங்கா நினைவில் சிவாஜி" என்ற தலைப்பில் பேராசிரியர் சி.சிவலிங்கராஜாவின் சிறப்புரை இடம்பெறும்.

யாழ்ப்பாண பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா நூலை வெளியிடுவார்.

இதனைத் தொடர்ந்து சிறப்பு நிகழ்ச்சியாக இலங்கை, இந்திய பேச்சாளர்கள் பங்குகொள்ளும் பட்டிமன்றம் ஒன்றும் இடம்பெறும். ஆர்வமுள்ள அனைவரும் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளலாம் என்றும் பிரவேசம் இலவசம் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (4-6-33)

# அச்சுவேலி சந்திரவேலாயுதர் ஆலய மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை கிழக்கு, வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை மாலை கணபதி ஓமத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடை பெறவுள்ளது.

மாலை 5 மணியளவில் திருவிழா நடைபெற்று, தினமும் வீதியுலா சுவாமி வலம் வரவுள்ளது. எதிர்வரும் 3 ஆம் திகதி புதன்கிழமை பகல் சங்காபிஷேகம் நடைபெற்று மதியம் அன்னதானம் நடைபெறுவதோடு, மாலை வசந்த மண்டப பூசையினை தொடர்ந்து திருவூஞ்சல் சுவாமி வீதியுலா என்பன நடைபெறவுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல் மாகாண கல்வித் திணைக்களம்
# க.பொ.த (சா/த) ஆண்டிறுதிப் பரீட்சை-2022
# English

## English Language
## Paper 1

**Test 01**
**Read the value speech done by one of the boys in your class. Fill in the blanks with the given words. There is an extra word. One has been done for you.**

fast, home-made, forget popular, ~~healthy~~, vitamin, important,

Good Morning dear teacher and my dear friends!
I am here to give the day's thought and it is about 'Having a (1) .. **healthy**... breakfast'.
As you know having a wholesome breakfast is very (2)......... since it is the first meal of the day and it is a meal
after a (3) .................. about 10 to 12 hours. Always try your best to have a (4).....................
balanced diet which gives carbohydrate, protein and (5).........This helps to give you a kick
start for a new day and you can do your studies well.
Finally, Don't (6)......... to have a fruit after the main meal. It reminds me the old saying 'an apple a day keeps the doctor away.' Thank you.

**(1x5=5marks)**

**TEST 2**
**Underline the correct answer. First one is done for you.**
Ashen : Tell me where did you (1) ........... last weekend? ( go / went )
Binuth: We went to Unawatuna. We (2).........the whole weekend there. (spend / spent)
Ashen : Really! Then you must have had a wonderful time there. Tell me more about your trip.
Binula: Well, I enjoyed the trip but, I (3).........we must be more considerate about our nature. ( think / thought) I am disappointed about the way our people behave.
Ashen : Why do you say so?
Binula: Our local tourists (4)......... little care on the environment. ( pay / paid) They discard all polythene stuff, leftover food and everything on the beach. It's so sad to see. We spent more than three hours to (5)............... the beach. (clean / cleaned )
Some foreigners (6).........us. ( help / helped ) But none of the locals.
Ashen : Wow! That's great! I am proud of you my friend.

**(1/2x10=5marks)**

**TEST 3**
Study the picture and fill in the blanks with the given words in the box.



architectural
bag
rows
pedestrian
people
pet
them
vehicles
walking
way

This is a picture of a busy city. There are many people (1).............on the pavements and some are on the (2)........................ crossing. Most of the people are carrying a (3) .................. and dressed formally. It seems that they are either on their (4).........to work or returning from work. A few of (5)..................... are walking with their (6)................dogs. The road seems to be jammed with (7) ........................ but they have stopped at the crossing for the (8).............to cross the road. In the background we can see (9) ...................... of tall buildings of different (10)........................ designs.

**(1/2x10=5marks)**

**TEST 4**
**Nisal is looking for some popular sayings to be used in the speeches that he is preparing to do at a speech competition. Read and match the most appropriate popular saying with the speech topics.**

| Speech topics | Popular saying | |
|---|---|---|
| 1.Do good to feel good | a. You can't win the game if you don't even play it | |
| 2.Find your strengths, don't feed your weaknesses | b. Better to be an optimist who gets disappointed than a pessimist who has no hope | 1 |
| 3.Abreast your world knowledge | c. The purer the stream, the better the water, The greater the leader, the more successful the country | |
| 4.Be a finisher | d. You can't win , if you don't begin | |
| 5.The eyes of leadership | e. Failure is fuel for success if you share so | |
| 6.Facing challenges | f. Five minutes of learning today is better than no minutes of learning today | |

**(1x5=5marks)**

**TEST 5**
**Fill in the blanks in the SMS that Tishok sent to Rivith. Select the most suitable words from the recipe of Banana Bread.**



**Rivith,**
My sister and I tried the banana bread recipe today. It was delicious and easy to make. I think you can also try. I'm pretty sure that everyone in your family will like it. You need 40 ml of condensed milk (1) ..**mixed**... with 25 ml of water, three to four bananas, 150 g of sugar, three eggs, 270 g of flour, baking powder 2 tps and baking soda ½ tps and 60 ml of vegetable oil. First mix flour, baking powder and baking soda and (2)........... and keep aside. Then peel the bananas and cut into pieces and add sugar and beat. You may add (3) ...............:. one at a time. Continue (4)..........the mixture until it reaches to a (5)............ like a sponge. Stop beating and then flour should be (6).................. Later you need to add the condensed milk and vegetable oil and mix well. Finally bake it in a moderate heat for 40 minutes.

**(1x5=5marks)**

**TEST 6**
The school has been informed that the vaccination of students for COVID will be held next week. Write a notice informing parents and students about the program. Include the following. Use about 50-60 words.
-date, time and venue- who will be vaccinated ( Grades )- consent letter compulsory
.............................................................................................................
.............................................................................................................
.............................................................................................................

**(5marks)**

**TEST 7**
**Read the story and answer the questions below.**
A young man called Tom Smith owned and worked in a sweet shop in London. Tom sold sugared almonds, each one wrapped in bright paper like the French ones. They sold well and he noticed that young men were buying them to give to their sweethearts. He began placing 'love mottoes' on small slips of papers inside the sweet wrapping. 'You know the sort of thing', 'I think you are gorgeous' or "Will you marry me?'
In 1946 Tom began to wonder if he could cash in on Christmas. Instead of sweets, why not wrap little toys and novelties in the twisted wrapping? Tom experimented and had the idea of making a wrapping that could be pulled apart. The Christmas toy-in-a-pull-apart-wrapper was a success, but Tom was still not satisfied.
One evening he was standing in front of the fire when he kicked his Christmas log into place. There was a shower of sparks and the log crackled and almost set Tom's trousers on fire
"That's it" Tom cried. 'What need something in my wrapper that will make a 'crack' when it is pulled open'
He worked with several chemicals until at last he found one that was safe, easy to make and would make a noise just loud enough to amuse his customers.
The new 'crackers' were a huge success and Tom had to open a factory to produce them and he lived happily ever after.

1)Tom Smith was a........................ of a sweet shop.
a) customer b) owner c) worker
2) Initially Tom sold.............................................................
a) crackers b) toy-in-a-pull-apart- wrapper c) sugared almonds
3)Where did he write the love mottoes?
.............................................................................................................
4)What suggested that new crackers were a huge success?
.............................................................................................................
5)What were the features of Tom's last product?
a)safe, easy to make and cheap
b) safe , easy to handle and make a noise
c)safe, easy to make and make a noise to amuse people

**(1x5=5marks)**

**TEST 8**
**Write a paragraph on one of the following topics. Use about 75 words.**
(a)An achievement in my life (b) Mobile phones
.............................................................................................................
.............................................................................................................
.............................................................................................................

## English Language
## Paper II

**Test 9**
**Fill in the blanks with the correct part of the word in brackets. One is done for you.**

1.We couldn't see anything. The whole area was in complete.............(dark)
2.My...............is to get a good job to be independent from the parents(ambitious)
3.It is the duty of an employer to provide a good.........to the customers. (serve)
4.Now people have learnt to do their.................by themselves. (working)
5.The committee had to........... their efforts to get more votes for the candidate ( intense)
6.Sahan finally.........................in passing his driving test.(successful)
7.The......................did some amazing card tricks.(magic)
8.You must................ your seat belts while driving, It's for your safety. (fast)
9...................can sometimes be overwhelming for some celebrities.(famous)
10.He.......................... told me about his achievement. (pride)

**( 1/2x10=5 marks)**

**Test 10**
**Fill in the blanks with the correct part of the verb given in the brackets. One is done for you.**

### Going back to clay

During the ancient times clay vessels (1) ... **were used**....(use) for day-to-day activities such as domestic utensils and religious purposes as in funeral urns. Such urns (2)................. (find) at Ibbankatuwa and Pomparippu along with human remains and utensils used for the rituals. In ancient times Buddhist stupas (3) ........................(build) using clay.
Clay is an eco-friendly material. It (4)......................... (play) an important role in the environment it self by being a natural scavenger of pollutant. Therefore it (5)........................(be) hygienically useful. This amazing material (6) ............... .........(mould) into different shapes and forms giving opportunity for hidden talents to (7)........................... (find) its way to surface. Clay pots (8)......................... (use) in cooking as they slowly heat and retain heat for a longer time. Utensils with different shape and texture (9) .................... (invade) the local market today. On the other hand it (10)........................ (pave) the way for the pottery industry to bloom. It can (11)............(promote) as a foreign income earner if government supports the people involved in pottery

**( 1/2x10=5 marks)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**TEST 11**

**Fill in the blanks with the words given below.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| areas | a | appears | and | caused | eruption | huge |
| however | loss | objects | of | shallow | subside | tremendous |

A Tsunami develops when a large mass of water is displaced. This can be (1)..................by an undersea earthquake or a volcanic (2)....................... When undersea earthquake occurs it causes large (3)………………. of the sea floor rise and (4)……………. . This leads to the occurrence of (5)……………….waves.

Tsunami travels at a high speed (6)……………. about 500 to 1000km per hour. (7)..................its speed reduces when it enters the (8)........................... coastal waters and its height increases.

When (9)……………. tsunami wave reaches the coast it (10).............. as a wall of water. With its (11)..........................energy the fast-moving wave can crush houses (12)........................other structures in the coastal areas. Large (13)................such as ships can be pushed several kilometers inland.

Tsunami causes great (14)...................of life and property. Most of the deaths caused by Tsunami are due to drowning. Although tsunamis are not frequent, they can occur at any time of the year. **(1/2x14= 7 marks)**

**TEST 12**

**Following are some of the utterances that Kavindu said. Convert them into the reported speech**

Kavindu said,

(1)"I am going to cricket practices"

He said that he was going to cricket practices

(2)"I went to Suriyawewa to watch the cricket match and the stadium had been crowded"

..........................................................................................

(3)"I'm going to see a dentist now since I have a toothache."

..........................................................................................

(4)"Sansith was very tired after his swimming practices."

..........................................................................................

(5)"My sister migrates to Australia and will find a job soon."

..........................................................................................

(6)"You can stay here till I come."

..........................................................................................

**(1x5=5 marks)**

**TEST 13**

**Read the poem and answer the questions.**

**Growing Pains**

**By Jeans Little**

Mother got mad at me tonight and bowled me out
She said I was lazy and self-centered
She said my room was a pigsty
She said she was sick and tired of forever nagging, but I gave her no choice
She went on and on until I began to cry
I hate crying in front of people. It was horrible.

I got away, though, and went to bed and it was over
I knew thing would be okay in the morning
Solid with being sorry, too polite, but okay
I was glad to be by myself.

When she came to my room and apologize
She explained, too.
Things had gone all wrong all day at the store
She hadn't had a letter from my sister and she was worried
Dad has also done something to her.
She even told me about that
Then she cried.
I kept saying" It's all right. Don't worry"
And wishing she'd stop

I'm just a kid.
I can forgive her getting mad at me. That's easy
But her worries…….
I don't know what to do with her sadness.
I yell at her often. "You don't understand me!"
But I don't want to have to understand her
That's expecting too much.

1)What was the mother's complaint about the poet?

..........................................................................................

2)According to the poet what does the poet dislike and consider awful?

..........................................................................................

3)Write down three reasons for mother to get annoyed?

..........................................................................................

4)What is easy for the poet?

..........................................................................................

5)Does the poet have a clear idea to help the mother to overcome her worries? Support your answer quoting the line.

..........................................................................................

**(1x5=5 marks)**

**TEST 14**

**Select one of the following.**

(a)As the Secretary of the Social Service Club of your school write a letter to the Manager of a Shoe Factory requesting him to donate some pairs of shoes to be donated among under-privileged students.

Include

- Brief description of the club-
- Explain the project-(area selected / when will it be/ number of beneficiaries/ what will be donate).
- Requesting to be a sponsor Use about 100 words.

**OR**

(b)The following pie chart shows the results of a survey conducted among 200 students in grade 11 on how they spend their free time. Study the pie chart and write a description about it. The following words will help you. Use about 100 words.

**Most popular, lowest percentage, highest percentage, equal, majority, minority**

( 10 marks)




..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

**TEST 15**

**Read the text and answer the questions.**

The cop moved along the street, looking strong and important. This was the way he always moved. He was not thinking of how he looked. There were a few people on the street to see him. It was only ten at night, but it was cold. And there was a wind and a little rain in it.

He stopped at doors as he walked along, trying each door to be sure that it was closed for the night. Now and then he turned and looked up and down the street. He was a fine-looking cop, watchful, guarding the peace.

People in this part of the city went home early. Now and then you might see the lights of a shop or of a small restaurant. But most of the doors belonged to business places that had been closed hours ago. Then the cop suddenly slowed his walk. Near the door of a darkened shop a man was standing. As the cop walked towards him, the man spoke quickly.

"It's alright officer" he said. "I am waiting for a friend. Twenty years ago we agreed to meet here tonight. It sounds strange to you, doesn't it? I'll explain if you want to be sure that everything's all right. About twenty years ago there was a restaurant where this shop stands. "Big Jeo' Brady's restaurant." " It was here until five years ago" said the cop.

"Twenty years ago tonight" said the man, "I had dinner here with Jimmy Wells. He was my best friend and the best fellow in the world. He and I grew here in New York like two brothers. I was eighteen and he was twenty. The next morning I was to start for West to find a job and make a great success. You couldn't have pulled the Jimmy out of New York.

"We agreed that night that we would meet here in twenty years. We thought that in twenty years we would know what kind of men we were and what future waited for us"

"It sounds interesting. Have you heard from your friend since you went West?"

"Yes for a time we did write to each other" said the man. But after a year or two, we stopped. But I know that Jimmy will meet here if he can. He was as sure as any man in the world. He'll never forget. "The waiting man took out a fine watch, covered with small jewels. "Three minutes before ten' he said. " It was ten that night when we said goodbye at the restaurant door"

The cop took a step or two. "I'll go on my way" he said, "I hope your friend comes all right. If he isn't here at ten, are you going to leave?

"I am not!" said the other. "I'll wait half an hour, at least. If Jimmy is alive on earth, he'll be here by that time. Good night, officer"

"Good night," said the cop and walked away. There was now a cold rain falling and the wind was stronger. About twenty minutes he waited and then a tall man in a long coat came hurrying across the street. He went directly to the waiting room.

"Is that you, Bob?" he asked, doubtfully

"Is that you, Jimmy Wells? Cried the man at the door. The new man took the other man's hands in his, "It's Bob! It was certain I would find you here if you were still alive. Has the West been good to you?"

"It gave me everything I asked for. You've changed, Jimmy. I never thought you were so tall" The man from the West was beginning to tell the story of his life.

At the corner stood a shop with electric lights. When they came near each turned to look at the other's face. The man from the West stopped suddenly and pulled his arm away." You are not Jimmy Wells" he said. "Twenty years is a long, but not long enough to change the shape of a man's nose"

"It sometimes changes a good man into a bad one" said the tall man. "You've been under arrest for ten minutes, Bob. Chicago cops thought you might be coming to New York. They told us to watch for you. Are you coming with me quietly? That's wise. But here is something that I was ask to give you. It's from a cop named Wells" The man from the West opened the little piece of paper. His hand began to shake a little as he read.

"Bob: I was at the place on time. I saw the face of the man wanted by Chicago cops. I didn't want to arrest you myself. So I went and got another cop and sent him to do the job"

JIMMY

From 'After Twenty Years' by O. Henry

(1)Say whether these statements are **true** or **false**

(a)Jimmy and Bob were friends. (…….)

(b)They were of same age (…….)

(c)After departing they had written to each other continuously. (……..)

(d)The cop who came first is Bob's friend Jimmy. (…….)

(2). Describe the cop who walked along the street?

..........................................................................................

(3) What is the name of the restaurant where these two friends met at last?

..........................................................................................

(4) What was the agreement they came into?

..........................................................................................

(5) How long did he wish to stay after 10 o clock?

..........................................................................................

(6)Write the sentence which says that some features of people rarely change.

..........................................................................................

(7) i) Paragraph one the word "He" refers to..................................................

ii) Paragraph six the word "we" refers to..................................................

**TEST 16**

**Write on one of the following. Use about 200 words.**

(a)Write a speech you would make in the morning assembly on **"Time Management"**

Include – what Time Management is

-importance of time management for a student

-what are the results of wasting time

-suggestions for students to manage time usefully

(b)Write an article to your school magazine on **'How can we develop our country'**

Include - what resources are available (natural & human)

- ways and means of utilizing them

-what malpractices at present that we should avoid

-goals for the future

(c)Write an essay to the school magazine on **' My precious eleven years at college'**

Include - your precious memories as a student

-lessons learnt for the life

-good people you meet

-how supportive the college to promote your personality

(d) Complete the following story.

It was a sleepless night. So I turned on the television aimlessly to watch whatever. Suddenly there was 'Breaking News' .........

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

**(15 Marks)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

158





"அவனை இவ்விடம் தருவித்துப் பேசுவதற்காகவே கொடுத்தேன். இப்போது அம்மோதிரத்தை அவனிடமிருந்து வாங்கிக் கொண்டு விடப் போகிறேன்."

"எதற்காக அவனைத் தருவித்தாய்? அவனிடம் இவ்வளவு நேரம் என்ன சல்லாபம் செய்து கொண்டிருந்தாய்?"

"ஒரு முக்கியமான லாபத்தைக் கருதியே அவனுடன் சல்லாபம் செய்து கொண்டிருந்தேன். நம்முடைய நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள அவனால் பெரிய அனுகூலம் ஏற்படும்."

"அடி பாதகி! கடைசியில் உன் பெண் புத்தியைக் காட்டி விட்டாயா? யாரோ முன்பின் தெரியாத வாலிபனிடம் நமது இரகசியத்தை"

"வீணில் ஏன் பதறுகிறாய்? நான் ஒன்றும் அவனிடம் சொல்லிவிடவில்லை. அவனிடமிருந்துதான் இரகசியத்தைக் கிரஹித்துக் கொண்டேன்." "என்ன கிரஹித்துக் கொண்டாய்?"

"இவன் காஞ்சியிலிருந்து பழையாறைக்கு ஓலை கொண்டு போகிறான். பழையாறையிலுள்ள பெண் புலிக்குக் கொண்டு போகிறான், அதை என்னிடம் காட்டினான். அவள் கொடுக்கும் மறு ஓலையை என்னிடம் கொண்டு வர வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தேன். அதற்குள் நீ வந்து விட்டாய்."

"ஓலையுமாயிற்று எழுத்தாணியும் ஆயிற்று. இதனாலெல்லாம் நமக்கு என்ன உபயோகம்?"

"உன்னுடைய அறிவின் ஓட்டம் அவ்வளவுதான்! புலிக் குலத்தை அடியோடு அழிப்பது என்று நாம் விரதம் கொண்டிருக்கிறோம். ஆனால் நீங்கள் ஆண்புலிகளை மட்டுமே எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். பெண் புலியினாலும் குலம் வளரும் என்பதை மறந்து விட்டீர்கள். அது மட்டுமல்ல தற்போது இந்தச் சோழ ராஜ்யத்தை ஆளுவது யார் என்று எண்ணியிருக்கிறாய்? பலமிழந்து செயலிழந்து நோய்ப் படுக்கையில் படுத்திருக்கும் கிழவனா? காஞ்சியிலும் இலங்கையிலும் உள்ள இளவரசர்களா?"

"இல்லை! உன்னை ராணியாகப் பெறும் பாக்கியம் பெற்ற தனாதிகாரி பழுவேட்டரையர்தான். இது உலகம் அறிந்ததாயிற்றே!"

"அதுவும் தவறு! உலகம் அப்படி எண்ணுகிறது இந்தக் கிழவரும் அப்படி எண்ணியே ஏமாந்து போகிறார். நீயும் அந்த ஏமாற்றத்துக்கு உள்ளாகியிருக்கிறாய். உண்மையில் பழையாறையில் உள்ள பெண் புலிக்குட்டிதான் இந்த ராஜ்யத்தை ஆளுகிறது. அரண்மனைக்குள் இருந்தபடி அந்தக் கர்வக்காரி சூத்திரக் கயிற்றை இழுத்து எல்லாரையும் ஆட்டி வைக்கப் பார்க்கிறாள்! அவளுடைய கொட்டத்தை நான் அடக்குவேன். அதற்காகவே இந்த வாலிபனை உபயோகப் படுத்திக் கொள்ளப் போகிறேன்" ரவிதாசனுடைய முகத்தில் வியப்புக்கும் மரியாதைக்கும் உரிய அறிகுறிகள் தென்பட்டன.

"நீ பெரிய கைகாரிதான் சந்தேகம் இல்லை ஆனால் இதெல்லாம் உண்மை என்பது என்ன நிச்சயம்? உன்னை எப்படி நம்புவது?" என்றான்.

"அந்த வாலிபனை உன்னிடமே ஒப்புவிக்கிறேன். நீயே அவனைச் சுரங்க வழியில் கோட்டைக்கு வெளியே அழைத்துக் கொண்டு போ! கண்ணைக் கட்டி அழைத்துக் கொண்டு போ! பழையாறைக்கு அருகில் சென்று காத்திரு! குந்தவை கொடுக்கும் மறு ஓலையுடன் இங்கே அவனை மீண்டும் அழைத்துக் கொண்டு வா! அவன் தப்பித்துக் கொள்ளப் பார்த்தாலும் உன்னை ஏமாற்றப் பார்த்தாலும் உடனே கொன்று விடு" என்றாள் நந்தினி.


(தொடரும்)




## ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

ஒரு கோவில் கோபுரத்தில் சில நீல நிறப் புறாக்களும் சில வெள்ளை நிறப் புறாக்களும் வாழ்ந்து வந்தன. நீலப் புறாக்கள் தாம் வெள்ளைப் புறாக்களை விட அழகாக இருப்பதாக எண்ணி கர்வத்துடன் இருந்தன. சில நாட்களின் பின் அக் கோபுரத்தில் திருத்த வேலைகள் ஆரம்பமானது.

அதனால் எல்லாப் புறாக்களுக்கும் கோபுரத்தை விட்டு வெளியேற வேண்டி ஏற்பட்டது. புறாக்கள் எல்லாம் வேறொரு இடம் தேடி ஒரே திசையில் பறந்து சென்றன. அவைகள் பறந்து செல்லும் போது ஒரிடத்தில் வெயிலில் உலர்வதற்காக பரப்பப் பட்ட நெற்களைக் கண்டன. கண்டதும் அனைத்தும் ஒன்றாக அவ்விடத்திற்கு பறந்து சென்று காயப் போட்டப்பட்ட நெற்களை தின்று தீர்த்து விட்டு அருகே இருந்த ஒரு பெரிய மரம் ஒன்றில் அமர்ந்தன.



தானியத்தை காய்வதற்காக பரப்பி விட்டு சென்ற வேடன் திரும்பி வந்து பார்த்த பொழுது தானிய மணிகள் ஒன்று கூட இல்லாதது கண்டு அதிர்ச்சியடைந்தான். தானியங்கள் காயப்போட்ட இடத்தில் புறாக்களின் எச்சம் கிடப்பதை பார்த்து வேடன் என்ன நடந்தது என்பதை ஊகித்தான்.

நாளைக்கு இந்த புறாக்களை எப்படியும் வலை விரித்து பிடித்து விட வேண்டும் என்று முடிவு செய்து அதன்படி மறுநாள் வலை ஒன்றைத் தயார் செய்து அந்த இடத்தில் விரித்து தானியங்களையும் போட்டு புறாக்கள் வரும் வரை காத்திருந்தான்.

அடுத்த நாள் அங்கே வந்த புறாக்கள் தானியத்தைப் பார்த்ததும், அதை உண்ணும் ஆசையில் வேகமாக தரையிறங்கி உண்ணத் தொடங்கின. சில மணித்துளிகளில் அதன் கால்கள் வலைகளில் சிக்கிக் கொண்டன.

சற்று தொலைவில் மறைந்திருந்த வேடன் நிலைமையை நன்கு புரிந்து கொண்டு புறாக்களை பிடிக்க ஓடி வந்தான். வேடன் வருவதைப் பார்த்த புறாக்கள் ஆபத்தை உணர்ந்து கொண்டு, உயிர் மீதுள்ள ஆசையினால் எல்லாப் புறாக்களும் ஒன்றாக இறக்கையை விரித்து பறக்க ஆரம்பித்தன. வலையையும் புறாக்கள் தூக்கி கொண்டு உயரப் பறந்து சென்றன.

இதனைக் கண்ட வேடன், "அய்யய்யோ" புறாக்கள் போனாலும் பரவாயில்லை. நான் கஷ்டப்பட்டு தயாரித்த வலையும் அதோடு போகிறதே" என்று புலம்பிக் கொண்டே, பறந்து செல்லும் புறாக்களின் பின்னே ஓடினான்.

பறந்து செல்லும் போதே, அதில் இருந்த நீலப் புறாக்கள் கர்வத்தோடு, "எங்களது வலிமையால்தான் நீங்களும் காப்பாற்றப் பட்டு இருக்கிறீர்கள். நாங்கள் சிறகை மிக வேகமாக அடித்து பறக்கவில்லை என்றால் அவ்வளவுதான்" என்று கூறின. உடனே வெள்ளை நிறப் புறாக்களும் தம் பங்குக்கு, "நாங்கள்தான் வலிமையோடு பறந்தோம்.

உங்களுக்கு அழகு இருக்கலாம், ஆனால் ஆற்றல் கிடையாது" என்று கூறிக் கொண்டு ஒன்றுக் கொன்று சண்டையிட்டுக் கொண்டே பறந்தன.

வீண் கர்வத் தினால் சண்டையிட்டுக் கொண்டு பறந்ததினால் அவற்றின் பறக்கும் வேகம் குறைய ஆரம்பித்தது, அதனால் அவை ஒரு மரக்கிளையில் வலையுடன் சிக்கிக் கொண்டன.

இதனைப் பார்த்த வேடனுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற பழமொழிக்கேற்ப இப் புறாக்கள் தப்பி விடுமோ என்று பயந்தேன். நல்ல வேளையாக அவற்றின் "ஒற்றுமை நீங்கியதால் அனைவருக்கும் தாழ்வு" என்ற நெறிப்படி பறந்த புறாக்களே நன்றி என்று புறாக்களைப் பார்த்து கூறிக் கொண்டே அவைகளை பிடித்து தனது கூடைக்குள் போடத் தொடங்கினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வாகிய ஆடையில் எப்பொழுதும் இருவகை நூல் இருக்கும். நன்மை, தீமையே அவை.
– ஷேக்ஸ்பியர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## முள்முருக்குக்கு அடுத்ததாக தென்னையைப் பறிகொடுக்கவோ

ஒரு காலத்தில் மங்களகரமான நிகழ்வுகளுக்காக வீட்டின் முற்றத்தில் பந்தல் போடுவார்கள்.

அவ்வாறு அமைக்கப்படும் பந்தலுக்காக பந்தல்கால் நாட்டும் நிகழ்வு இடம்பெறும்.

நாள், நட்சத்திரம் பார்த்து உறவுகள் கூடி பந்தல் கால் நாட்டப்படும்.

எனினும் இன்றைய திருமண மண்டப கலாசாரத்தில் பந்தல்கால் பற்றி நம் பிள்ளைகள் அறிவதற்கு வாய்ப்பே இல்லை எனலாம்.

எனினும் நம் தமிழகத்தில் பந்தல்கால் நாட்டும் பண்பாட்டு நிகழ்வு இன்னமும் உயிர்ப்புடன் உள்ளது என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

இவை ஒருபுறமிருக்க, திருமண நிகழ்வில் பொன்னுருக்குதல் என்பது திருமணத்துக்கு முன்பாக இடம்பெறும் விசேட நிகழ்வாகும்.

இவ்வாறு பொன்னுருக்கல் நடைபெற்றதும் கன்னிக்கால் நடுகின்ற முறைமை நம் தமிழ்ப் பண்பாட்டில் உள்ளது.

இங்கு கன்னிக்கால் என்பது மணமகன், மணமகள் வீடுகளின் முன்பக்கத்தில் நட்டு, பட்டுடுத்தி, தங்க நகை அணிந்து நவதானியம் விதைத்து, பால் அறுகு வைத்து, கற்பூர தீபம் காட்டி வழிபாடு செய்யப்படும்.

இல்வாழ்வின் பூர்வாங்கமான பொன்னுருக்கலோடு நாட்டப்படும் கன்னிக்கால் என்பது முள்முருக்கை குறிப்பதாகும்.

இவ்வாறு நடப்படும் கன்னிக்கால் தழைத்து வளரும்போது, அந்தக் குடும்பமும் தழைத்தோங்கும் என்ற நம்பிக்கையும் நம் மத்தியில் உளது.

இவ்வாறு எங்கள் வாழ்வியலோடு இரண்டறக் கலந்து நின்ற முள்முருக்கம் மரம் இன்று நம் மத்தியில் இல்லை.

இனம் தெரியாத நோயொன்றின் தாக்கத்தால் முள்முருக்கம் இனமே கூண்டோடு அழிந்துபோனது.

விவசாய அமைப்புகள், விவசாய ஆராய்ச்சி நிலையங்கள், விவசாயப் படிப்புகளுக்கான கல்விச்சாலைகள் என ஏகப்பட்ட அமைப்புகள் இருந்தும் எங்கள் வாழ்வியலோடு கலந்து நின்ற முள்முருக்கைக் காப்பாற்ற முடியாமல் போயிற்று.

நிலைமை இதுவாக இருக்கையில், இப்போது எங்கள் தென்னை மரங்களில் ஒரு வகை ஈக்களின் தாக்கமும் அதன் எச்சங்களும் தென்னை இனத்தை அடியோடு அழிக்க முற்பட்டுள்ளன.

இதுபற்றி ஏலவே இவ்விடத்தில் பிரஸ்தாபித்திருந்ததோடு, அது தொடர்பான விளக்கக் கட்டுரைகளையும் தந்திருந்தோம்.

எனினும் தென்னை ஈ தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு தனிப்பட்ட ரீதியிலோ அன்றி அரச கட்டமைப்பாகவோ எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

ஆம், யாழ்ப்பாணத்திலுள்ள செவ்விளநீர் தென்னை மரங்கள் முழுவதிலும் ஈ தொற்றுக்களின் தாக்கம் வெளிப்படையாகத் தெரிகிறது.

இதன் அடுத்த கட்டம், எல்லாத் தென்னைகளிலும் ஈ தொற்றுப் பரவும்போது முள் முருக்கம் இனத்துக்கு ஏற்பட்ட அதே கதி தென்னைகளுக்கும் ஏற்பட்டுவிடலாம்.

ஆகையால் இதுவிடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்புகள் தென்னை ஈ தொற்றை அடியோடு ஒழிக்க அதிரடியாகக் களமிறங்க வேண்டும்.

# அனைவரது கருத்துக்கள் அடிப்படையில் குரங்குகள் தொடர்பில் இறுதித் தீர்மானம்

## விவசாய அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

சீன அரசாங்கத்தின் நேரடித் தலையீடு இல்லா விட்டாலும், சீனாவில் உள்ள நிறுவனமொன்றின் வேண்டுகோளுக்கு இணங்க, குரங்குகளை சீனாவுக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக விவசாய அமைச்சின் செயலாளர் குணதாச சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் கலந்துகொண்டு அவர் இதனைத் தெரிவித்தார்.

பயிர்களுக்கு ஏற்படும் அழிவுகளை கருத்திற்கொண்டு, விவசாய அமைச்சு என்ற வகையில் இது தொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.

சீன அரசாங்கத்தின் தலையீடு இதில் இல்லை. தனியார் நிறுவனம் ஒன்றே மிருகக் காட்சி சாலைகளுக்காக குரங்களை வழங்க வேண்டுமென எழுத்துமூல கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளது. அவர்கள் ஒரே தடவையில் அன்றி, பல்வேறு கட்டங்களாக குரங்குகளை கோரியுள்ளனர்.

எனினும், குரங்குளை வழங்குவது குறித்து தற்போது ஆராயப்பட்டு வருகிறது. வனப்பகுதிகளில் உள்ள குரங்களை பிடித்து நாம் வழங்கப்போவதில்லை. விவசாய பயிர்களுக்கு நாசம் ஏற்படுத்தும் விலங்குகள் தொடர்பிலேயே அவதானம் செலுத்தப்படும். இந்த விலங்குகளுக்கு இதன்போது எந்தவகையிலும் பாதிப்பு ஏற்படாது.

இதற்கான சட்ட ஏற்பாடுகள் தொடர்பிலும் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஆலோசனை கோரப்படவுள்ளது. எவ்வாறாயினும், இது தொடர்பாக இறுதி முடிவு எடுக்கப்படாததால் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பொது மக்கள் என அனைவரதும் கருத்துகளின் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றார். (ம-7,9)

## கேரள கஞ்சாவுடன் அம்பாறையில் ஒருவர் கைது

அம்பாறை - பெரிய நீலாவணைப் பகுதியில், கேரள கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பெரிய நீலாவணை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய நேற்று முன்தினம் மாலை முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் 860 கிராம் கேரளகஞ்சாவுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் தொடர்பான அடுத்தகட்ட சட்ட நடவடிக்கைகளை பொலிஸார் முனனெடுத்துள்ளனர். (ம-7,9)

## மிளகாய்த் தூள் எறிந்து வர்த்தகரிடம் கொள்ளை

(கொழும்பு)

வர்த்தகரின் கண்களில் மிளகாய்த்தூள் வீசிவிட்டு கொள்ளைச் சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது. அத்துருகிரிய பகுதியில் கோழி இறைச்சி வர்த்தகருக்கே இச் சம்பவம் நிகழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வர்த்தகருக்கு சொந்தமான பாரவூர்தியின் சாரதி வர்த்தகரின் மனைவி மற்றும் பிறிதொரு பெண் ஆகியோர் இச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளனர். வர்த்தகர் மற்றும் சந்தேக நபர்கள் மூவரும் பாரவூர்தியில் பயணித்துக்கொண்டிருக்கையில் இயற்கை உபாதை கழிப்பதற்காக வாகனத்தை நிறுத்திய சந்தர்ப்பத்திலேயே வர்த்தகருக்கு மிளகாய் தூள் எறியப்பட்டுள்ளது.

அத்துடன் வர்த்தகரிடமிருந்து கொள்ளையிடப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட ஒரு இலட்சத்து 86 ஆயிரத்து 500 ரூபாய் பணம் மீட்கப்பட்டுள்ளது. மேலும் சந்தேக நபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,9)

## போலி நாணயத்தாள்களுடன் இருவர் பொலிஸாரால் கைது.

(கொழும்பு)

அலவத்துகொட பகுதியில் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான 43 போலி நாணயத்தாள்களுடன் இரண்டு பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புகைப்பட நிலையத்தின் கணினி உதவியுடன் இந்த நாணயத்தாள்கள் அச்சிடப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில், 36 மற்றும் 41 வயதுடையவர்களே கைதாகியுள்ளனர்.

அவர்கள் மேலதிக விசாரணைக்காக குற்றப் புலனாய்வு திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ம-7,9)

## கிளிநொச்சியில் விபத்து நால்வர் காயம்

கிளிநொச்சி நகரில் A9 வீதியில் இடம் பெற்ற வாகன விபத்தில் ஒரு மோட்டார் சைக்கிளில் பயணித்த நால்வர் காயமடைந்துள்ளனர்.

குறித்த விபத்து நேற்று மாலை 4.30 மணியளவில் கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகம் முன்பாக இடம்பெற்றது.

கிளிநொச்சி நகரிலிருந்து முறிகண்டி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து எதிரே பயணித்த ரிப்பர் வாகனத்துடன் மோதியது. சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நால்வர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் இருவர் சிறார்கள் எனவும், ஏனைய இருவரும் பெரியவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,9,100)

## மனைவியை தாக்கி கொலை செய்த கணவன் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

மனைவியை தாக்கி கொலை செய்த கணவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஹங்வெல்ல - தும்மோதர பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கணவனின் தாக்குதலில் பலத்த காயமடைந்த மனைவி சிகிச்சைகளுக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

எனினும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக வைத்தியசாலை வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,9)

## தேசிய அரசு தொடர்பில் தீர்மானம் எடுக்கவில்லை

### காமினி லொக்குகே எம்.பி தெரிவிப்பு

தேசிய அரசு அமைப்பது தொடர்பில் தமது கட்சி இன்னும் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை என மொட்டு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

அவ்வாறானதொரு யோசனையை ஜனாதிபதி முன்வைத்தால் அது குறித்து ஆராய்ந்து கட்சி உரிய முடிவை எடுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அனைத்து தரப்பினரும் இணைந்து ஆட்சியமைப்போம் என ஜனாதிபதி ஏற்கனவே அழைப்பு விடுத்திருந்தார். அதற்கு எதிர்க்கட்சிகள் சாதகமான சமிக்ஞைகளை வெளிப்படுத்தவில்லை எனவும் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டிருந்த நெருக்கடி நிலையை தீர்க்கும் நோக்கிலேயே தற்போதைய ஜனாதிபதிக்கு நாம் ஆதரவு வழங்கினோம். எமது எதிர்பார்ப்பை அவர் நிறைவேற்றியுள்ளார். நாட்டை மீட்கும் அவரின் முயற்சிக்கு ஆதரவு வழங்கப்படும் எனவும் காமினி லொக்குகே குறிப்பிட்டுள்ளார். (ம-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை-இந்திய கடல் எல்லையும் மீன்பிடித் தொழிலும் ஓர் அலசல்

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்)

06

4) "எல்லையோரக் கடலை அடுத்த மண்டலம்" எனும் பகுதி வரையறுக்கப்பட்டு அதில்கரை யோர நாடுகளுக்கு, அதன் வழக்காறுகள், சட்டங்களை மீறுபவர்களை தண்டிப்பதற்கும் தடுப்பதற்கு மான அதிகார வரம்பு வழங்கப்பட்டுள்ளது.

5) சர்வதேசக் கடல் போக்குவரத்திற்குப் பயன்படும் நீரிணைகளுக்கான சிறப்பு அதிகார அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

6) "தீவுக் கூட்டங்களின் கோட்பாடு" அங்கீகரிக்கப்பட்டது. அதன்படி தீவுக் கூட்டங்களில் உள்ள தீவுகளைச் சுற்றிலும், தீவுகளுக்கு இடையிலும் தீவுகளை இணைக்கும் வகையிலும் இருக்கும் அனைத்து நீர்களும், அத்தீவுக் கூட்டங்களின் மீது இறையாண்மை அதிகாரம் பெற்ற நாட்டின் உள்நாட்டு நீர்களாகும்.

7) கடல் சுற்றுச் சூழலின் மாசுக் கட்டுப்பாட்டுக் கொள்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

8) ஆழ்கடல்களின் உயிர் வளங்களை மேலாண்மை செய்வதிலும் பாதுகாப்பதிலும் நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு பற்றிய கோட்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

9) நான்கு புறமும் நிலப் பகுதிகளால் சூழப்பட்ட நாடுகளுக்கும் கடல் வரை உள்ள இடைப்பட்ட நாடுகளுக்கும் இடையே உள்ள உறவுகளை வழிப்படுத்தும் சிறப்பு அதிகார அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

10) தேசிய அதிகார வரம்பிற்கு அப்பால் உள்ள ஆழ்கடல் பரப்பின் இயற்கை வளங்களை பாதுகாக்கவும் நாடுகளுக்கிடையே தகைமை நெறிப்படி பகிர்ந்தளிக்கவும் அதிகாரம் படைத்த சர்வதேசக் கடற்படுக்கை அதிகாரசபை ஒன்றை ஏற்படுத்துவது குறித்த கோட்பாடுகள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அம் மாநாட்டின் முக்கிய அம்சங்களில் ஒன்றாகும்.

### சர்வதேச கடற்படுக்கை அதிகாரசபை

தேசிய சட்ட அதிகாரத்தின் வரையறைக்கு அப்பால் உள்ள கடற்படுக்கை "மானிட வர்க்கத்தின் பொது மரபுரிமைச் சொத்து" என பிரகடனப்படுத்தப்பட்ட பின் தேசிய சட்ட அதிகாரத்துக்கு அப்பால் உள்ள பகுதிகளின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தி கட்டுப்படுத்துவதற்காக சர்வதேச கடற்படுக்கை அதிகாரசபையொன்றை (உடன்படிக்கை) நிறுவியது. 1994 இல் நடைமுறைக்கு வந்த இவ் வதிகாரசபை 1996 யூனில் தன்னாட்சி கொண்ட சர்வதேச ஒழுங்கமைப்பாக செயற்படத்தொடங்கியது.

### கடல் எல்லை

கடல் எல்லை என்பது கடற்பரப்பின் மீது நிலம் மற்றும் அரசியல் சார்ந்து மனிதனால் உருவாக்கப்பட்ட இரு நாடுகளுக்கிடையே யான பிரிவாகும். கடல் எல்லை ஒரு நாட்டின் கடல்சார் உயிர் மற்றும் கனிம வளங்களின் மீதும் கடற் பரப்பின் மீதான சட்டங்களுக்கும் உரிய அந்நாட்டின் உரிமையை நிலை நாட்டுகிறது. கடல் எல்லை ஆனது ஒருநாட்டின் ஆளுகைக்குட்பட்ட கடற்பரப்பு , அண்மை கடற்பரப்பு , பொருளாதார தனியுரிமை வலயம் மற்றும் கண்டத்திட்டு என்று நான்கு பகுதிகளாக வரையறுக்கப்படுகிறது.

### ஆளுகைக்குட்பட்ட கடற் பரப்பு

கடல்சட்டம் குறித்த ஐக்கிய நாடுகள் மாநாடு (1982) இல்வரையறையின்படி, ஆளுகைக்குட்பட்ட கடற் பரப்பு என்பது ஒரு நாட்டின் கடல் அடித்தளமட்டத்திலிருந்து 12 கடல் மைல் (அதாவது 22.2 கி.மீ, 13.8 மைல்) வரை உள்ள கடற்பரப்பாகும். ஆளுகைக்குட்பட்ட கடற்பரப்பு என்பது ஒரு நாட்டின் இறையாண்மை எல்லை ஆகும், மேலும் ஒரு நாட்டின் இறைமை ஆளுகைக் குட்பட்ட கடற்பரப்பு உள்ளடக்கிய வான் பகுதி மற்றும் கடற்படுக்கைக்கும் பொருந்தும்.

### அண்மை கடற்பரப்பு

அண்மை கடற்பரப்பு என்பது ஆளுகைக்குட்பட்ட கடற்பரப்பின் வெளிப்புறத்திலிருந்து அடுத்த 12 கடல்மைல் (அதாவது ஒரு நாட்டின் கடற்கரை அடித்தள மட்டத்திலிருந்து 24 கடல்மைல்) உள்ள கடல் நீர்ப் பரப்பாகும். அண்மை கடற்பரப்பில் ஒருநாடு அதன் சுங்க, நிதிவரவு, குடியமர்தல் மற்றும் சுகாதார சட்ட மற்றும் விதிமுறை மீறல்களை தடுக்கவும், கண்காணிக்கும் வரையறை பெற்றுள்ளது.


### பொருளாதார தனியுரிமை வலயம்

பொருளாதார தனியுரிமை வலயம் ஒருநாட்டின் கடற்கரை அடித்தள மட்டத்திலிருந்து அதிக பட்சமாக 200 கடல் மைல் தூரம் வரை பரவியுள்ள கடற்பரப்பாகும். இது அண்மை கடற்பரப்பையும் உள்ளடக்கியுள்ளது. இப்பகுதியின் மீன் வளம், கனிமவளம், பெற்றோலிய ஆய்வு போன்ற அனைத்து வளங்கள் மீதான உரிமைகளையும் மற்றும் இவ் வளங்கள் சார்ந்த மேலாண்மையையும் அந்த நாடே கட்டுப்படுத்துகிறது. எனினும் இப் பகுதியின் வழியாக வேறு நாட்டின் கப்பல்கள் பயணிக்கவோ அல்லது ஐக்கிய நாடுகளின் விதி களுக்குட்பட்டு இக்கடற்பரப்பில் வேறு நாடுகள் கழிவுகளை கொட்டாவோ தடை செய்யும் அதிகாரம் இல்லை.

### தளக்கோடு எவ்வாறு தீர்மானிக்கப்பட்டது?

எல்லையோரக் கடலின் அகலமாக 12 மைல்களை கடற்கரையின் எந்த ஆதாரக் கோட்டை/ தளக் கோட்டை அடிப்படையாக வைத்து அளப்பது என்பது மற்றுமொரு சர்வதேசப் பிரச்சினையாக இருந்தது. இது தொடர்பாக இருவேறு கருத்துக்கள் நிலவியது. வளைந்து நெளிந்து செல்லும் கடற்கரையின் தாழ் நிலை நீர் எல்லைக்கு இணையாகச் செல்லும் கோடே எல்லையோரக் கடலை அளக்கும் அடி எல்லைக் கோடாக இருக்க வேண்டும் என்பது ஒரு கருத்தாகும். அவ்வாறின்றி அது கடற்கரை செல்லும் பொதுவான போக்கின் அடிப்படையில் கடலுக்குள் நீட்டிக் கொண்டிருக்கும் நிலப்பகுதிகளை இணைக்கும் கோடே எல்லையோரக் கடலை அளக்கும் தளக் கோடாக இருக்க வேண்டும் என்பது மற்றொரு கருத்தாகும்.

இலங்கையின் தரை மற்றும் கடல் ஆட்புல எல்லைகள்




### இலங்கையின் கடல் எல்லைகள்

இலங்கையின் கடல் எல்லை ஆனது நாட்டின் ஆளுகைக்குட்பட்ட கடற்பரப்பு, அண்மை கடற்பரப்பு, பொருளாதார தனியுரிமை வலயம் மற்றும் கண்டத்திட்டு என்று நான்கு பகுதிகளாக வரையறுக்கப்படுகிறது. இலங்கை, சுமார் 1760 கி.மீ நீளமுடைய கடற்கரையைக் கொண்டுள்ளது. கிட்டத்தட்ட 532000 சதுர கிலோமீற்றர் பரப்பளவுடைய கடற் பிரதேசத்தைக் கொண்டுள்ளது.

இலங்கையில் 1977 ஜனவரி 15 இன் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஆணை மூலம் பல்வேறு கடல் வலயங்களை ஜனாதிபதியின் பிரகடனம் மூலம் பிரகடனப் படுத்தும் ஏற்பாட்டை அளிக்கும் பிரதான சட்டமான 1976 செப்ரெம்பர் 1 இன் 22 ஆம் இலக்க சட்டமே கடல் வலயங்களுக்கான உரிமைகளை நடைமுறைப்படுத்த உதவுகின்றது. இச் சட்டத்தில் இந்தியா - இலங்கை கடல் எல்லைப் புள்ளிகளின் ஆள் கூறு கள் (அகலாங்கு,நெட்டாங்கு) கொடுக்கப்பட்டுள்ளன.(படம் -1 ஐப் பார்க்க)

### கச்சதீவை உரிமைகோரல்

கச்சதீவை இந்தியாவிற்கு மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்ததாக இல்லாவிட்டாலும், தமிழ் நாட்டு மீனவர்களுக்கு இது அவர்களின் வாழ்வாதாரத்துடன் தொடர்புடைய மிகமுக்கியமான இடமாகும். ஏனெனில் கச்சதீவைச் சுற்றியுள்ளகடற்பகுதிகளில் இறால் . மீன்கள் ஏராளமாக உள்ளன. இலங்கை சுதந்திரத்திற்குப் பிறகு தீவின் மீது பிராந்திய உரிமைகளைக் கோரியது மற்றும் வான் வழி பயிற்சி துப்பாக்கிச் சூடுக்கு அதைப் பயன்படுத்துவதால் இந்தியாவின் விமானங்களை அந்தப் பகுதியில் பறக்க அனுமதிக்க வேண்டாம் என்று இந்தியாவிடம் கோரியது.கச்சதீவில் ராம்நாடு ஜமீன்தார் அனுபவித்து வந்த உரிமைகளின் அடிப்படையில் அத் தீவைமதராஸ் அரசு சொந்தமாக்கிக் கொண்டது என்றும் இந்த தீவை மீன்பிடிக்க பல்வேறு தரப்பினருக்கு குத்தகைக்கு விட்டதாக பதிவுகள் உள்ளன என்றும் இந்தியா கூறியது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராளுமன்றில்...

தின்போது இந்த தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது.

அதன்படி, எதிர்வரும் 25 முதல் 28 வரை பாராளுமன்றம் கூடவுள்ளதுடன், சர்வதேச நாணய நிதிய உடன் படிக்கை தொடர்பான விவாதம் எதிர் வரும் 26, 27 மற்றும் 28ஆம் திகதி களில் நடைபெறவுள்ளது.

அத்துடன், குறித்த விவாதத்தின் மீதான வாக்கெடுப்பை எதிர்வரும் 28 ஆம் திகதி நடத்துவதற்கும் நேற்றைய கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர் மானிக்கப்பட்டுள்ளது. (ம-7,9)

## வடக்குக்...

ஏற்பாடு செய்திருந்தது.

வட மாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் நேற்று ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக் கப்பட்டன.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை கொண்டு வரும் முயற்சி உடனே கைவிடப்பட வேண்டும் என இந்த ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொண்ட வர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை, கிழக்கு மாகாணத் தின் திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களிலும் பயங் கரவாத எதிர்ப்புச் சட்டத்தை உடனடி யாக இரத்து செய்ய வேண்டும் என வலியுறுத்தி ஆர்ப்பாட்டங்கள் முன்னெ டுக்கப்பட்டன. (ம-7,9)

## அரசாங்கத்தின்...

தின் ஒரே நோக்கமாகும்.

இந்த நோக்கத்தை முறியடிக்க அனைத்து முற்போக்கு சக்திகளையும் திரட்டி வருவதாக எதிர்க்கட்சித் தலை வர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர் பில் நேற்று விசேட அறிவிப்பொன்றை விடுத்த அவர், மேற்கண்டவாறு தெரி வித்தார்.

மகாசங்கத்தினர், சர்வ மதத் தலை வர்கள், பல் இன அமைப்புகள் மற்றும் சிவில் சமூகம் உட்பட பெரும்பான்மை யான மக்கள் அரசாங்கத்தால் முன் வைக்கப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப் புச் சட்டமூலத்திற்கு எதிராகவுள்ளனர். மல்வத்து தேரர் கூட இச்சட்டம் மிகவும் பயங்கரமான சட்டம் எனக் குறிப்பிட் டுள்ளார்.

பாராளுமன்றத்தில் ஜனநாயகத்தை போற்றும் அனைவரும் இணைந்து இதனை முறியடித்து பொதுமக்கள் மற்றும் சிவில் அமைப்புகளுடன் இணைந்து அரசாங்கம் நடைமுறைப் படுத்தவுள்ள இந்த சர்வாதிகார எதேச் சதிகாரச் சட்டத்தை முற்றாக தோற் கடிக்கத் தயார் எனத் தெரிவித்தார். (ம-7,9)

## இலங்கை - இந்...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நேற்று சந்தித்தார்.

இதன்போது, இந்திய உயர்ஸ்தானி கர் முன்னாள் ஜனாதிபதிக்கு புத் தாண்டு வாழ்த்துகளை தெரிவித்தார்.

குறித்த சந்திப்பின்போது, இலங் கையுடனான கடன் மறுசீரமைப்புக்கு இந்தியாவின் ஆதரவு உள்ளிட்ட பரஸ் பர நலன்கள் குறித்து விவாதித்தனர்.

சர்வதேச நாணய நிதியம் (IMF) இலங்கைக்கு வழங்கிவரும் ஆதர வுக்கு இந்தியா துணைநிற்பதாகவும் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே உறுதியளித்துள்ளார்.

மேலும், இலங்கையில் இந்திய முதலீடுகள் குறித்தும் இருவரும் கலந்துரையாடியுள்ளதாக தெரியவரு கிறது.

நட்பு ரீதியிலும் சுமுகமான சூழ் நிலையிலும் நடைபெற்ற இந்தச் சந் திப்பு, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான உறு திப்பாட்டை இருதரப்பும் மீண்டும் உறு திப்படுத்தியது. (ம-7,9)

## மக்களின்...

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ மற் றும் அமெரிக்க தூதுவர் ஜூலி சங் ஆகி யோருக்கிடையிலான விசேட சந்திப்பு நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போதே அமெ ரிக்க தூதுவரிடம் அமைச்சர் இத னைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் நீதி அமைச்சி னால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது,

இந்தச் சந்திப்பின்போது அரசாங் கத்தினால் [illegible] பிப்பதற்கு [illegible] புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் தொடர்பிலும், மறுசீரமைப்புக்கள் ஊடாக இலங்கை அடைந்துள்ள பொருளாதார முன்னேற்றங்கள் தொடர் பிலும் அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தூதுவருக்கு விளக்கமளித்தார்.

நாட்டில் தற்போது நடைமுறை யிலுள்ள பயங்கரவாத சட்டத்திற்கு பதி லாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தை அறிமுகப்படுத்துவதற்கான நோக்கம் சாதாரண மக்களின் பாது காப்பினை உறுதிப்படுத்துவதற் காகவேயாகும் என்றும், மனித உரி மைகள் மீறப்படுவதற்கான சந்தர்ப்பம் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத் தில் நீக்கப்பட்டுள்ளதாகவும் அமைச் சர் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கத்தினால் மக்களின் பாதுகாப்பினை உறுதிப் படுத்துவதற்கும், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும் எடுக்கப்பட் டுள்ள நடவடிக்கைகளை பாராட்டிய அமெரிக்கத் தூதுவர், பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் குறுகிய காலத்திற்குள் மீண்டெழுவதற் கான கட்டத்தை அடைந்துள்ளமைக்கு மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தியுள் ளார்.

இதேவேளை அமைச்சர் விஜே தாஸ ராஜபக்ஷ மற்றும் இலங்கைக் கான தென்னாபிரிக்க உயர்ஸ் தானிகர் எஸ்.ஈ. சுச்சலக் ஆகி யோருக்கிடையிலான சந்திப்பும் இடம்பெற்றுள்ளது.

தேசிய நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்காக இலங்கையில் நிறுவப் படவுள்ள நல்லிணக்க ஆணைக் குழு தொடர்பிலும், இந்த ஆணைக் குழுவை நிறுவுவதற்காக தென் னாபிரிக்காவின் அனுபவப் பகிர்வு களைப் பெற்றுக் கொண்டமை தொடர்பிலும் இதன்போது அவ தானம் செலுத் தப்பட்டது.

இலங்கையில் அமைதி மற்றும் நல்லிணக்கத்திற் கான நடவடிக் கைகளைப் போன்றே, பொரு ளாதார ஸ்திரத் தன்மையை ஏற் படுத்துவதற்கும் தென்னாபிரிக்கா ஒத்துழைப்பினை வழங்கும் என்றும் உயர்ஸ்தானிகர் அமைச்சரிடம் உறுதியளித்தார். (ம-7,9)

## வெப்...

அதிகரிக்கும் என வளிமண்டல [illegible] [illegible] டிக் காட்டியுள்ளது.

மேல், வடமேல், வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் மொனராகலை மற்றும் அம்பாந் தோட்டை மாவட்டங்களிலும் வெப்ப நிலை 39 முதல் 45 செல்சியஸ் வரை அதிகரிக்கலாம் என திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இன்று காலி, மாத்தறை, இரத்தின புரி, கேகாலை, நுவரெலியா, பதுளை மற்றும் மாத்தளை மாவட்டங்களில் சாதாரண வெப்பநிலை நிலவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதுகுறித்து சுகாதார அமைச்சி னால் வெளியிடப்பட்ட தகவல்களின் படி, வெப்பநிலை அதிகரித்திருக்கும் போது நீங்கள் வெளியில் வேலை செய் யும் நபராக இருந்தால், நீங்கள் கடுமை யான நடவடிக்கைகளை மட்டுப்படுத்த வேண்டும்.

மேலும், வெளியில் வேலை செய்ப வர்கள் நிழலில் தங்கி போதுமான அளவு தண்ணீர் குடிக்க வேண்டும். நீங்கள் பணியிடத்தில் இருந்தால், நிறைய தண்ணீர் குடித்துவிட்டு முடிந்த வரை நிழலில் ஓய்வெடுங்கள்.

வீடுகளில் தங்கியிருக்கும் முதியவர் கள் மற்றும் நோயுற்றவர்கள் தொடர் பில் கவனம் செலுத்துமாறும், சிறு குழந் தைகளை வாகனங்களில் ஏற்றிச் செல்ல வேண்டாம் எனவும் சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

வெள்ளை அல்லது வெளிர்நிற ஆடை களை அணியுமாறும் அதிகாரிகள் மக் களுக்கு அறிவுறுத்தியுள்ளனர். (ம-7,9)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 20/04/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1547
வெற்றி இலக்கங்கள்
சிம்மம் 9 4 3 4 0 3
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.04.20
சீட்டிழுப்பு இலக்கம் - 1122
M 07 11 28 29
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.04.20
சீட்டிழுப்பு இலக்கம் 3334
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
B 46 68 72 76
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 20/04/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1440
A 14 06 27 52 55

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.04.20
சீட்டிழுப்பு இலக்கம் 401
மீனம் 25 27 30 52 மீனம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/04/20
சீட்டிழுப்பு இலக்கம் 5092
Z 0 7 7 4 6 4
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2066
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.04.20
தினம் வியாழக்கிழமை
J 26 30 57 64
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,571,120/-
DLB www.dlb.lk

சனிதா
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.04.20
சீட்டிழுப்பு இல : 4227
வர்ணம் : சிவப்பு
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,104,540/-
வெற்றி இலக்கங்கள் 16 28 65 70 U
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,212,091.20
திகதி 2023-04-20
வெற்றி வாரம் 3778
வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள் 13 20 25 55
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 9,260,240/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
B 25 16 31 45 68
சீட்டிழுப்பு வாரம் 1242
வர்ணம் செம்மஞ்சள்
திகதி 2023.04.20 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 324,104,261.40
DLB தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk

சம்பர்தன வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 587
திகதி 2023-04-20
வர்ணம் நீலம்
L 12 39 63 04
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 19,042,896/-
DLB DEVELOPMENT LOTTERIES Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1892
வர்ணம் : இள நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2023.04.20
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,044,740/-
வெற்றி இலக்கங்கள் 02 17 62 74 B
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில்...

கூட்டமைப்பு நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு விசனம் வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உள்ளூராட்சி மன்ற தேர்தல், அரசியலமைப்புக்கும் தேர்தல் சட்டத்துக்கும் எதிராக ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் சர்வதேச சமூகம் இது தொடர்பாக பெரிதளவில் குரல்கொடுப்பதை காணக்கூடியதாக இல்லை.

எமது நாட்டு பிரச்சினைகளை நாட்டு மக்களே கலந்துரையாடி தீர்த்துக்கொள்ள வேண்டி இருக்கிறது.

சிவில் அமைப்புகளை ஒன்றிணைத்துக்கொண்டு, மக்களை அடக்கும் சட்ட மூலங்களை வாபஸ்பெற்றுக்கொள்ள அரசாங்கத்துக்கு அழுத்தங்களை பிரயோகிக்க முயற்சிக்கிறோம்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்த 4 தடவைகள் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது அந்த 4 சந்தர்ப்பங்களும் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன.

தேர்தலுக்கான திகதி அறிவிப்பு செய்ய முடியாத நிலைக்கு தேர்தல்கள் ஆணைக் குழுவை அரசாங்கம் நிர்க்கதிக்குள்ளாகி இருக்கிறது.

உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்த சட்டத்தின் பிரகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இருக்கிறது. அரசியலமைப்பு மற்றும் தேர்தல் சட்டத்தின் பிரகாரம் தேர்தல் நடத்தப்படவேண்டும். ஆனால் தற்போது தேர்தல் இடம்பெறுவது தாமதித்திருக்கிறது என்றார் (ம-7,9)

## கதவடைப்பு...

களுக்கு 13 ஆம் திருத்தச்சட்டத்தை எதிர்க்க முதுகெலும்பு உண்டா என கஜேந்திசகுமார் பொன்னமபலம் எம்.பி கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்ற இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் எதிர்வரும் 25 ஆம் திகதி கடையடைப்பு போரட்டத்தை முன்னெடுக்கின்ற தமிழ் தரப்புகளுடன் தமிழ் தேசிய மக்கள் முன்னணி இணையப் போவதில்லை என்றும் அவ்வாறு இணைந்தால் அது தமிழ் மக்களை முட்டாள் ஆக்கும் செயற்பாடகவே அமையும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

ஹர்த்தாலானது தங்களுடன் சம்பந்தப்பட்ட விடயம் அல்ல என்றும் மாறாக குறித்த தமிழ்த் தரப்புகள் புதுப்புது அமைப்புக்களை உருவாக்க முன்னமே இவற்றுக்கெதிராக் போராடிக்கொண்டிருக்கும் அமைப்பு தாம் என்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிட்டுள்ளார். இந்த விடயங்களை எதிர்க்க வேண்டுமென்றால் வேறு எவருடைய உதவியையும் தேடாமல் மக்களிடம் இவற்றை கொண்டு செல்ல முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அமைப்பை உருவாக்கிக் கொள்பவர்கள், இந்த பிரச்சினைக்கு அடிப்டையான ஒற்றையாட்சி அரசியலமைப்பு முறை உட்பட 13 ம் திருத்தச்சட்டத்தை தொடர்ந்தும் ஆதரிப்பதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஒருபுறம் அமைப்புகளை உருவாக்கி போராடுகின்றோம் என மக்களை ஏமாற்றுபவர்கள் மறுபுறம் இவை அனைத்தையும் மேற்கொள்ள ஒற்றையாட்சிக்குள்ளிருக்கும் 13 ம் திருத்தச்சட்டத்தை எதிர்க்க முதுகெலும் பற்றவர்களாகக் காணப்படுவதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் காட்டமாக பதில் வழங்கியுள்ளார். எனவே இவ்வாறான தரப்புகளுடன் இணைவதானது, மக்களை முட்டாள்களாக்கும் செயற்பாடாகும் என்றும் மாறாக இந்த நடவடிக்கைகளை எதிர்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7,9)

## எதிர்காலத்தில்...

தனியார் பேருந்துகள் உட்பட அனைத்து பேருந்துகளையும் ஒழுங்குபடுத்தும் புதிய டிஜிட்டல் வேலைத்திட்டத்தை அறிமுகப் படுத்தும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் பந்தல குணவர்த்தன இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது, அனைத்து பேருந்துகளையும் ஜிபிஎஸ் தொழில்நுட்பம் மூலம் கண்காணிக்கும் வசதி, வீதி அனுமதி வழங்கும் போது முன்பு வழங்கப்பட்ட புத்தகத்திற்கு பதிலாக QR குறியீடு கொண்ட டிஜிட்டல் அட்டை என்பன அறிமுகப்படுத்தப்படும் என அமைச்சர் தெரிவித்தார். (ம-7,9)

## முட்டைக்கு...

பட்ச சில்லறை விலையும் குறித்த வர்த்தமானி மூலம் அறிவிக்கப் பட்டுள்ளது. நிறை அடிப்படையில் விலை நிர்ணயம் செய்யப்பட்டதை அடுத்து, முட்டைகளின் விலை அதிகரித்துள்ளதாக, அகில இலங்கை சிற்றுணவக உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 44 ரூபாவாக இருந்த வெள்ளை முட்டை ஒன்றின் விலை 8 ரூபா அளவிலும், 46 ரூபாவாக இருந்த சிவப்பு அல்லது பழுப்பு நிற முட்டை ஒன்றின் விலை, 9 ரூபா அளவிலும் அதிகரித்துள்ளதாக அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நிர்ணய விலையை விடவும், அதிக விலைக்கு முட்டையை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக, நுகர்வோர் விவகார அதிகார சபை சட்டத்தின் அடிப்படையில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என குறித்த விசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க, முட்டை நிறை குறித்து தங்களுடன் எந்தவித பேச்சுவார்த்தையும் நடத்தப்படவில்லை என குறிப்பிட்டார். (ம-7,9)


### எரிபொருள் நிரப்புநர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றிற்கு அனுபவமுள்ள எரிபொருள் நிரப்புநர்கள் தேவை.
தங்குமிட வசதி உண்டு (C-6394)

021 222 4550
077 730 4545

### காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 30 பரப்பு காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)**

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100m தூரத்தில்.
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை (200,000/-) இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 Km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1 Km தூரம்
- பார்வையிடும் நேரம் : காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை

(15311)

076 733 6047/076 333 6079
076 733 6093

### காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 42 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு**

- பருத்தித்துறை வீதி, புத்தூர்ச் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நிலப்பரப்பு
- நன்னீரூற்று
- ஒரு பரப்பின் விலை 4 இலட்சம் (400,000/-)
- குடியிருப்பு சூழவுள்ள பகுதி
- பார்வையிடும் நேரம் காலை 6 முதல் மாலை 6 வரை

(15311)

**முழுக்காணிகளும் பிரதான காபற் வீதி முகப்புடனே உள்ளது.**

077 076 0389
076 911 9371
076 739 0413

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127

### வேலையாட்கள் தேவை

மந்திகையில் இயங்கும் 'புளூ பெரி' கிறீம் ஹவுசுக்கு சிற்றுண்டிகள் மற்றும் குளிர்பானங்கள் பரிமாறுபவர்கள். FRESH JUICE தயாரிக்கக் கூடியவர்கள் தேவை.
தங்குமிட வசதி உண்டு.சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்

BLUE BERRY CREAM HOUSE
சாவகச்சேரி வீதி, மந்திகை
077 588 0437 (C-6397)

### உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER



- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/=
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள்

(C-6396)

V2 TRAVELS

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

0777-068-777

### உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

எமது கிளைகள்: கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர், பண்டத்தரிப்பு, சங்கானை, கொழும்பு (C-6396)

### காணி விற்பனைக்கு

நல்லூர் நாயன்மார்கட்டு வீதியில் நல்ல அயற் சூழலான இடத்தில் 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. வீடுகள், பண்ணைகள் அமைக்க உகந்த இடம். (தரகர் தேவையில்லை) விலை பேசித் தீர்மானிக்கலாம். ஆர்வமுள்ளோர் தொடர்பு கொள்ளவும் (15313)

076 231 8693

### IELTS - New Batch ஆரம்பம்

Sp.Offer 10% Discount
உடன் Basic & Advance Grammar Classes, First Class (Free of Charge)
இல. 53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.
077 798 9830 By:- B.MURALI (15283)

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

### பணியாளர் தேவை

கம்பியூட்டர் அனுபவமுள்ள கணக்கு லிகிதர்கள்
ஆண்/பெண்
(ACCOUNTS CLERK) தேவை.
முன்னனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (C-6393)

தொடர்புக்கு 076 815 6470


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.